

அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்த

பதினாறாவது

நினைவுப் பேருரை

மலையக தமிழரின் புலம்பெயர்வும் இலக்கிய ஆக்கமும்

எம். எம். ஜெயசீலன்

அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு

2015

மலையகத் தமிழரின் புலம்பெயர்வும் இலக்கிய ஆக்கமும்

தமிழ்ச் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

எம்.எம். ஜெயசீலன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு
2015

நூல் : மலையக தமிழரின் புலம்பெயர்வும் இலக்கிய ஆக்கமும் - தமிழ்ச் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

ஆசிரியர் : எம்.எம். ஜெயசீலன்

பதிப்பாசிரியர் : தை. தனராஜ்

வெளியீடு : அமரர். இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு மனிங் டவுன், மங்களறோட், கொழும்பு 08.

திகதி : 27.09.2015

பக்கம் : 52

நன்றிகள்

இந்நூலை வெளியிடுவதற்கு நிதி உதவி வழங்கிய
ஹைலன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்
திரு.ஆர் சீதாராமன் அவர்களுக்கு
(பங்காளர், பொபி ஜுவலர்ஸ் கொழும்பு 11)
எமது அன்பு கலந்த நன்றிகள்.

-இர. சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவினர்.

மலையகத் தமிழரின் புலம்பெயர்வும் இலக்கிய ஆக்கமும்

அனைவருக்கும் வணக்கம்,
மலையகத் தமிழ்ச் சமூகத்தின் இயங்குதளத்தினை புதிய திசைகளை நோக்கி நகர்த்துவதற்கு பல முனைகளிலும் செயற்பட்டவர்களுள் அமரர் இர. சிவலிங்கத்திற்கு மிகமுக்கிய இடமுண்டு. ஆசிரியர், அதிபர், எழுத்தாளர், மேடைப்பேச்சாளர், தொழிற்சங்கவாதி, சட்டத்தரணி, அரசியல் ஆலோசகர் எனப் பல தளங்களிலும் ஆர்வத்துடன் செயற்பட்ட அவர், தன் முழு வாழ்வையுமே மலையகத் தமிழ்ச் சமூகத்தின் மீட்சிக்காக அர்ப்பணித்தவராவார்.

1960களில் உதயமாகிய புதிய மலையகத்தின் எழுச்சியிலும், அதன் இயக்கத்திலும் முக்கிய பங்காளராகவும் உந்துசக்தியாளராகவும் விளங்கிய இர. சிவலிங்கத்தின் ஆளுமை வீச்சு அன்றைய இளந்தலைமுறையினரை வெகுவாக ஈர்த்தது. அவர் பின் பெரும் இளைஞர் படையணி திரளத்தொடங்கியது. அத்துடன் இர. சிவலிங்கம் என்ற ஆளுமையின் தாக்கம் இன்றைய மலையகத்திலும் வெவ்வேறு மட்டங்களிலும் பிரதிபலித்தே வருகின்றது. அவ்வகையில் அவரது சேவையினை நினைவுகூரும் முகமாக ஆண்டுதோறும் கடந்த பதினைந்து வருடங்களாக சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவினர் நினைவுப் பேருரைகளை நிகழ்த்திவருகின்றனர். அத்தொடரோட்டத்தில் நானும் ஒரு பங்காளனாகி இவ் ஆண்டுக்குரிய நினைவுப் பேருரையினை நிகழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இர. சிவலிங்கத்தின் எழுத்தாக்கங்களும் செயற்பாடுகளும் மலையகத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அதனால் விளைந்த அவலங்கள், ஆகியவற்றுக்கு ஓர் எதிர்க்குரலாகவும் அம்மக்களின் விடுதலைக்கான எழுச்சிக் குரலாகவும் விளங்குவதைக் காணலாம். இவற்றுள்ளும் மலையகத் தமிழரின் பிரஜாவுரிமைப் பிரச்சினை, சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம், புலம்பெயர்ந்த மலையகத் தமிழரின் வாழ்க்கை போன்றன குறித்து அவர் அதிக கரிசனை காட்டியுள்ளார். 'சிறீமா-

சாஸ்திரி ஒப்பந்தம் ஒரு அவமான ஒப்பந்தம் என்றும் உலகத்தில் நாடுவிட்டு நாடு பெயரும் துர்ப்பாக்கியத்திற்கு தள்ளப்படுபவர்கள் பலர். அவர்கள் தஞ்சம் புகுந்த நாட்டை புதிய தாயகமாக்கி வாழ்வில் வெற்றி கண்டுள்ளார்கள். அந்நாட்டு மக்களும் தஞ்சம் புகுந்தோரை அன்புடனும், ஆதரவுடனும் அடைக்கலம் கொடுத்து வளர்த்து விடுகிறார்கள். ஆனால், இந்தியாவிலோ சிலோன்காரர் என்றும் அகதிகள் என்றும் அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். அவர்கள் தமிழகம் வந்து பத்து ஆண்டுகளுக்கு மேலான பின்னரும் அகதிகளாய், இலங்கையராய் வாழ வேண்டிய துர்ப்பாக்கியத்தை நோக்கும் பொழுது புதிய தாயகம் அவர்களை தாய் போல அரவணைத்து ஏற்றுக்கொள்ளவில்லை என்பது புலனாகின்றது' என்றும் பல இடங்களில் பதிவு செய்துள்ளதோடு, தான் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்த காலங்களில் புலம்பெயர்ந்த அம்மலையகத் தமிழர்களின் மீட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுமுள்ளார். அவ்வகையில் அப்பெரியாரின் நினைவுப் பேருரையை மொழி, இலக்கியத்துறை மாணவன் என்ற வகையில், புலம்பெயர்ந்த மலையகத் தமிழரின் அலைவும் உலைவும் மிக்க வாழ்வு, எவ்வாறு இலக்கியங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து நிகழ்த்த விழைகின்றேன்.

இப்பேருரையை நிகழ்த்துவதற்கு எனக்கு வாய்ப்பளித்த அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்த குழுத் தலைவர் திரு. எம். வாமதேவன் அவர்களுக்கும், எனது நினைவுப் பேருரையை பதிப்பித்து, நூலாக்கிய சிவலிங்கம் ஞாபகார்த்த குழு உறுப்பினர் பேராசிரியர் தை. தனராஜ் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இக்கட்டுரை ஆக்கத்தின்போது என்னுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட சிரேஸ்ட வழக்கறிஞர் எல். ஜோதிகுமார் அவர்களுக்கும் தமிழ்த்துறை விரிவுரையாளர்களான திரு. செ. சுதர்சன், திரு. பெ. சரவணகுமார், திரு. பா. சுமன் ஆகியோருக்கும் அரசறிவியல்துறை விரிவுரையாளரான திரு. இரா. ரமேஸ் அவர்களுக்கும் இலங்கைச் சட்டக்கல்லூரி மாணவன் நண்பர் கா. கமல் ஆகியோருக்கும் என்னுடைய அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறிமுகம்

இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு முக்கியக் கூறாக விளங்கும் மலையகத் தமிழ் இலக்கியம் தனக்கேயுரித்தான சில தனித்துவப் பண்புகளைக் கொண்டுள்ளது. அம்மலையக இலக்கியத் தொகுதியில், மலையகச் சமூகத்தின் சமூக உருவாக்கம் மற்றும் சமூக அசைவியக்கியத்தினை நுட்பமாகப் பதிவு செய்யும் பல படைப்புக்கள் உள்ளன. அவற்றுள் அச்சமூகத்தின் புலம்பெயர் வாழ்வியல் குறித்த படைப்புக்களும் குறிப்பிட்டுக் கூறத்தக்கன. ஆனால், மலையகத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வுகளிலும், தமிழில் புலம்பெயர் இலக்கியம் மற்றும் இலங்கைத் தமிழ் புலம்பெயர் இலக்கியம் ஆகியன பற்றிய ஆய்வுகளிலும் மலையகத் தமிழரின் புலம்பெயர் வாழ்வியல் குறித்த படைப்புக்கள் உரிய கவனத்தைப் பெறாமலிருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஆகவே, மலையகத் தமிழரின் புலம்பெயர் வாழ்வு பற்றிய படைப்புக்களை இனங்காண்பதும், அவற்றை ஆய்வுக்குட்படுத்துவதும், புலம்பெயர் தமிழ் இலக்கிய வரலாற்றில் அப்படைப்புக்களின் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்துவதும் அவசியமானதாகும். இதன் ஒரு முன்னோடி முயற்சியாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

சுதந்திர இலங்கையில் அரசியல் காரணங்களால் முதன்முதல் புலம்பெயர்ந்த சமூகக் குழுமமாக மலையகத் தமிழ்ச் சமூகத்தினை அடையாளப்படுத்தலாம். காலனித்துவத்தின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விரிவாக்கத்துடன் இலங்கையில் உருவாக்கம் பெற்ற அச்சமூகம், நாடு சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து, நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் பெரும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டது. அக்குழுமத்தின் பெருந்தொகையான மக்கள் நாடற்ற அநாதைகளாக்கப்பட்டதோடு மீண்டும் இந்தியாவிற்கே திரும்ப வேண்டிய கட்டாயத்திற்கும் உள்ளாக்கப்பட்டனர். அத்துடன் 1980களில் உக்கிரம் பெற்ற இனமுரண்பாட்டு யுத்தத்தினாலும் அக்குழுமத்தில் கணிசமானோர் நாட்டைத் துறந்து, புகலிடம் தேடி பிறநாடுகளில் தஞ்சம் புகுந்தனர். அவ்வகையில் அச்சமூகக் குழுமம் தன் வரலாற்றில் எதிர்நோக்கிய புலம்பெயர்வினைப் பிரதானமாக மூன்று வகையாக நோக்கலாம்:

01. காலனித்துவ காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காகத் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டோரின் புலம்பெயர்வு

02. சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தினால் இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியா சென்றோரின் புலம்பெயர்வு

03. இனமுரண்பாட்டு யுத்தத்தினால் நிகழ்ந்த புலம்பெயர்வு

காலனித்துவ காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காகத் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டோரின் புலம்பெயர்வு

இலங்கை வரலாற்றில் இறுதியாகக் குடியேறிய குழுமமாக மலையகத் தமிழ்ச் சமூகம் விளங்குகின்றது. ஆரம்பத்தில் ஒப்பந்த அடிப்படையிலான கூலிகளாக இலங்கை வந்து கோப்பித்தோட்டங்களில் சிலகாலம் வேலைசெய்து நாடு திரும்பியவர்கள், பின்னர் தேயிலைச் செய்கை விரிவாக்கத்துடன் இலங்கையையே தமது நிரந்தர வதிவிடமாகக் கொண்டனர். அவ்வாறு குடியேறியவர்களே இங்கு புதியதொரு சமூக, பொருளாதார, அரசியல் முறைமையொன்றினைக் கட்டியெழுப்பி, இன்று 'மலையகத் தமிழர்' என்ற தனியான ஒரு சமூக அடையாளத்தைப் பேணி வருகின்றனர். அவர்களது குடியேற்றமும் சமூக உருவாக்கமும் இலங்கையின் இனவர்க்கக் கட்டமைவிலும் அவற்றின் பண்பிலும் பல மாற்றங்களைத் தோற்றுவித்ததோடு, 'நாட்டின் பொருளாதாரத் தளத்தில், மூலதன உருவாக்கத்திலும் அதன் தாக்கத்திலும் கனதியான மாற்றங்களை ஏற்படுத்திவருகின்றன.' (சாந்திகுமார், 1983: 35)

சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தினால் இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியா சென்றோரின் புலம்பெயர்வு

காலனித்துவ விடுதலைக்கு முன்னரும் பின்னரும் இலங்கையில் இறுதியாகக் குடியேறிய சமூகத்தை நாட்டிலிருந்து அகற்றுவதற்கான செயற்பாடுகள் பல, இனத்துவ மற்றும் வர்க்க உந்துதல்களால் முன்னெடுக்கப்பட்டன. அவற்றுள் 1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தினால் பெரும்பாலான மலையகத் தமிழர்கள் நாடற்ற அநாதைகளாக்கப்பட்டனர். பின்னர் அப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் பல உடன்படிக்கைகள், சட்ட ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் 1964ஆம் ஆண்டு இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் நாடற்று அநாதையாகிய மலையகத் தமிழர்களை இரு நாடுகளும் பங்கு பிரித்து பிரஜாவுரிமை அந்தஸ்தினை வழங்க உடன்பட்டன. (விரிவுக்கு:

Nadesan, 1993, Sahadevan, 1995, சந்திரசேகரன், 1989, மோகன்ராஜ், 1984) இதனால் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறி, இலங்கையைத் தமது நாடாகக் கருதி, ஏறக்குறைய 150 வருட வரலாற்றைக் கடந்த சமூகத்தில் ஒரு தொகையினர் மீண்டும் இந்தியாவுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனால் இலங்கையில் அச்சமூகத்தின் அரசியல் பங்குபற்றுதல் வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டது. அத்துடன் சமூக, பொருளாதார ரீதியில் பல ஒடுக்குமுறைகளுக்கும் அச்சமூகத்தினர் உள்ளாக்கப்பட்டனர். அதேவேளை இந்தியாவுக்குப் புலம்பெயர்க்கப்பட்டவர்கள் அங்கு தனித்த ஒரு சமூகக் குழுமமாக மேற்கிளம்ப முடியாமலும், இந்திய சமூகத்தோடு ஒன்றுகலக்க முடியாமலும் அந்நியப்பட்டு வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இனமுரண்பாட்டு யுத்தத்தினால் நிகழ்ந்த புலம்பெயர்வு

1983க்குப் பின்னர் நாட்டில் உக்கிரம் பெற்ற இனவன்முறையும் போராட்டமும் பெருந்தொகையான தமிழர்களைப் புகலிடம் தேடி உலகமுழுவதும் ஓடத் துரத்தியது. அதில் மலையகத் தமிழர்களும் உள்ளடங்குவர். இனமுரண்பாட்டு யுத்தத்தினாலான புலம்பெயர்வில் மலையகத் தமிழர்கள் உள்ளடக்கப்படாத நிலையே பொதுவாகத் தொடரினும் இனமுரண்பாட்டு யுத்தத்தினால் இருவேறு வகைகளில் மலையகத் தமிழர்கள் புலம்பெயர்ந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஒன்று, 'வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற பேரினவாதத்திற்கு எதிரான போராட்டங்களுக்கான எதிர்வினைகள் பல, மலையகத் தோட்டங்களில் நிகழ்த்தப்பட்டன. அடிக்கடி பேரினவாதிகளால் தோட்டங்களில் வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டு தோட்டங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.' (சந்திரசேகரன், 1989: 224) அதனால் பலர் புலம்பெயர்ந்து இந்தியாவுக்குச் செல்லவும் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு, கிழக்கு நோக்கி இடம்பெயரவும் தலைப்பட்டனர். இரண்டாவது, 1980களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், சட்டங்கள் மற்றும் மலையகத் தமிழர்மீது ஏவப்பட்ட வன்செயல்களாலும், தொழிலின் நிமித்தமும் 1980களுக்குப் பின்னான இனமுரண்பாட்டு போராட்டத்தின் விளைவுகளாலும் மலையகத் தமிழர்களில் பலர் வடக்கு, கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்தனர். (Nadesan, 1993: 227, சந்திரசேகரன், 1989: 231,232) அவ்வாறு இடம்பெயர்ந்தவர்களுள் சிறு அளவிலானோரும் போராட்டச் சூழலால் புலம்பெயர்ந்துள்ளனர்.

இதன்படி முதற்கட்டத்தில் தொழிலின் நிமித்தம் சொந்த நாட்டை விட்டு இலங்கையில் குடியேறி தனித்த சமூகக் குழுமமாக உருவாக்கம் பெற்றவர்கள், இரண்டாவது கட்டத்தில் அரசியல் சதியினால் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குப் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவ்வாறு புலம்பெயர்ந்தோர் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் குடியேறியவர்களின் மூன்றாம் தலைமுறையினர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு முதற்கட்டத்தில் பெரிதும் வெறும் கூலிகளாகவே புலம்பெயர்ந்து வந்த சமூகத்தினருள்ளே ஓர் உயர்மட்டக் குழுமம் இரண்டாம் கட்டத்தில் புலம்பெயர்ந்து சென்றபோது மேற்கிளம்பியிருந்தது. இந்த இரண்டாவது கட்டப் புலம்பெயர்வு 1970களிலேயே அதிகளவில் நிகழ்ந்தது. இதன்பின்பு 1980களிலே இனமுரண்பாட்டுப் போராட்டமும் பேரினவாதிகளின் ஒடுக்குமுறையும் வடக்கு, கிழக்குத் தமிழர்களுடன் மலையகத் தமிழர்களையும் இலங்கைக்கு வெளியே புகலிடம்தேடி ஓடச்செய்தன.

இம்மூவகைப் புலம்பெயர்வுகளில் பிரஜாவுரிமைப் பிரச்சினை மற்றும் அதன் உடன்விளைவான சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தினால் இடம்பெற்ற புலம்பெயர்வே மலையகத் தமிழரிடத்து பெரும் அதிர்வுகளையும் அவலங்களையும் ஏற்படுத்தின எனலாம். ஒப்பீட்டளவில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த ஆரம்பகட்ட புலம்பெயர்வு அம்மக்களின் புதுவாழ்வுக்கான தேர்வாகவே பெரிதும் அமைந்தது. இனமுரண்பாட்டு யுத்தத்தினால் சிறு அளவிலான மலையகத் தமிழர்களே புலம்பெயர்ந்தனர். ஆனால், ஒப்பந்தத்தினால் நிகழ்ந்த புலம்பெயர்வில் பெருந்தொகையினர் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் புலம்பெயர மறுத்தவர்கள் நாடுகடத்தவும் பட்டனர். மேலும், அரசியல் பங்குபற்றுதலில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டனர். இவ் அந்நியப்பாடானது அவர்களது பிரச்சினைகளைப் பேசுவதற்கும் உரிமைகளை வென்றெடுப்பதற்குமான ஜனநாயக வாயில்களை மூடியதோடு அரசியல் தளத்தில் அவர்களை குரலற்றவர்களாகவும் ஆக்கியது. மொத்தத்தில் இப்புலம்பெயர்வு அச்சமூகத்தினரின் மொத்த வாழ்வினையும் ஒழுங்கீனமுள்ள துன்பியலாக்கியதோடு இலங்கையிலும் இந்தியாவிலும் அவர்களது சுய உரிமை இருப்பிற்கும், மேல்நோக்கிய நகர்வுக்கும் பெரும் குந்தகத்தை விளைவித்தது.

இம்மூவகைப் புலம்பெயர்வுகளும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பெருஞ்சலனங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியதோடு

புலம்பெயர்ந்தவர்களின் வாழ்விலும் பல தாக்கங்களைத் தோற்றுவித்தன. அவ்வாழ்வியல் அம்சங்களை அச்சமூகத்தைச் சார்ந்தோரும் பிறரும் பல்வேறு படைப்புக்களில் பதிவுசெய்துள்ளனர். அப்படைப்புக்களில் பிரஜாவுரிமை பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளால் இடம்பெற்ற புலம்பெயர்வின் அலைவும் உலைவும் மிக்க வாழ்வினைச் சிறுகதைகள் சித்திரிக்குமாற்றினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட சிறுகதைகள்

மலையகத் தமிழரின் பிரஜாவுரிமை பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு இதுவரை வெளிவந்துள்ள சிறுகதைகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட 23 கதைகள் இவ்வாய்வின் முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. அக்கதைகள் யாவும் பிரஜாவுரிமை பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகள் தனிமனித வாழ்வில் ஏற்படுத்திய அவலங்களையும் அதிர்வுகளையும் வெவ்வேறு கோணங்களில் பதிவு செய்வதன் மூலம் ஒட்டுமொத்த மலையகத் தமிழரின் புலம்பெயர் வாழ்வின் பல பக்கங்களைச் சித்திரிப்பதாக அமைந்துள்ளன. அக்கதைகள் பின்வருமாறு:

அ.செ.முருகானந்தனின் "காளிமுத்துவின் பிரஜாவுரிமை" (1958), செந்தூரனின் "உரிமை எங்கே?" (1960), இரா. சிவலிங்கத்தின் "முன்னவன் சொத்து" (1963), தி. ஞானசேகரனின் 'பிறந்த மண்' (1972), ரத்னசபாபதியின் "அம்மாசி இலங்கைப் பிரஜையானான்" (1974), மொழிவரதனின் 'பிரிந்து செல்லும் ஒரு தோழன்' (1978), புன்னைவனராசனின் "அவர்கள் அகதிகள்", (1980) மற்றும் "இக்கரை நியாயம்" (1981), கே.ஆர்.டேவிட்டின் "கௌரவமான அடிமைகள்" (1982), ப. ஆப்டீனின் "புதுப்பட்டி கிராமத்திற்கு கடைசி டிக்கட்" (1984) கோவிந்தராஜின் "கந்தசாமி ஊருக்குப் போகிறான்" (1986), "குத்தகை" (1987) மற்றும் "கப்பல் எப்பங்க" (1993), சி. பன்னீர்செல்வத்தின் "தமிழகம் நோக்கி" (1967), "நங்கூரம்" (1979), "சுட்ட மண்ணும் சுடாத மண்ணும்" (1986) "ஜென்ம பூமி" (1992), "காணாமல் போன நதிகள்" (1992), மாத்தளை சோமுவின் "அவர்களின் தேசம்" (1993), மு. சிவலிங்கத்தின் "பேப்பர் பிரஜைகள்", (1963), "மதுர கீதம்", (1968), "ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டு..." (1999) மற்றும் ஒப்பாரிக்கோச்சி" (2008)

பிரஜாவுரிமைப் பிரச்சினையும் மலையகத் தமிழரின் புலம்பெயர்வும்

மலையகத் தமிழர் தமது சமூக உருவாக்க காலம் முதல் இற்றைவரை பிரித்தானிய ஏகாதிபத்திய அரசு, இலங்கை-இந்திய அரசுகள், சுதேசிய அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனைய சமூகக் குழுமங்கள் என யாவற்றாலும் வரலாறு நெடுகிலும் புறக்கணிப்புக்களுக்கும் ஓரங்கட்டல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். அத்துயர் தோய்ந்த வரலாற்றின் மாறா வடுவாக இன்றும் அழுத்திக் கொண்டிருப்பது, அவர்களது பிரஜாவுரிமை பறிப்பும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளுமே.

இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களை அரசியலிலிருந்தும் நாட்டிலிருந்தும் அப்புறப்படுத்துவதற்கு அரசியல் அரங்கில் சட்டரீதியாகவே பல நடவடிக்கைகள், நாடு சுதந்திரமடைவதற்கு முன்னரும் பின்னரும் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, நில அபிவிருத்திச் சட்டம் (1935), மீன்பிடிச் சட்டம் (1940), பஸ் சேவைகள் சட்டம் (1942), பிரஜாவுரிமைச் சட்டம் (1948), இந்திய பாகிஸ்தானிய வதிவிடச் (பிரஜாவுரிமை) சட்டம் (1949) முதலியனவும் சிறீமா–சாஸ்திரி ஒப்பந்தம் (1964), சிறீமா-இந்திரா ஒப்பந்தம் (1974) போன்றனவும் மலையகத் தமிழரை தொடர்ந்தும் வஞ்சித்தன. (விரிவுக்கு: Nadesan, S: 1993, Sahadevan, 1995, சந்திரசேகரன், 1989, தம்பையா, 1995, மோகன்ராஜ், 1984, ஜயவர்தன, 2011) இச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் ஒப்பந்தங்களின் துணைக்கொண்டு மலையகத் தமிழரின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வு திட்டமிட்டுச் சிதைக்கப்பட்டதோடு அடிப்படை உரிமைகள்கூட மறுக்கப்பட்டன. இம்மறுப்பும், எதிர்ப்பும் 1920களிலிருந்து வியாபகமடைந்ததைக் காணலாம். குறிப்பாக, '1920களில் சர்வசன வாக்குரிமை பற்றியும் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றியும் விவாதங்கள் நடந்தபோதே தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான சிங்களப் பூர்ஷ்வாக்களின் தாக்குதல் ஆரம்பித்தது.' (ஜயவர்தன, 2011: 56) அதனது உச்சகட்ட வெளிப்பாடே 1948ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டமாகும்.

'இந்திய அச்சுறுத்தல், இடதுசாரி நெருக்கடி ஆகியவை பற்றிய கருத்துக்களின் அடிப்படையில் அரசியல் நடவடிக்கையாக இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தைத் தள்ளிவைக்கும் பிரஜாவுரிமைச் சட்டத்தைச் சிங்கள அரசியல்வாதிகள்

அறிமுகப்படுத்தினர்.' (மேலது: 69) இதன் மூலம் 'தொழிலாள வர்க்கம், சிறுபான்மை இனம் ஆகியன ரீதியில் தோட்டத்தொழிலாளரின் அரசியல் செல்வாக்கைக் குறைக்க வேண்டும் என்ற இலங்கைப் பூர்ஷ்வாக்களின் நீண்டகால நோக்கம் நிறைவேறியது மட்டுமன்றி அத்தொழிலாளரைப் பொருளாதார ரீதியில் ஒடுக்கி வைக்கவும் முடிந்தது' (மேலது: 66) இதற்குச் சிங்களப் பூர்ஷ்வாக்களுக்கு ஏற்பட்ட இன அச்சமும் வர்க்க அச்சமுமே காரணங்களாக அமைந்தன. (சாந்திகுமார், 1980: 36, ஜயவர்தன, 2011: 67,68)

இச்சட்டத்தின்படி வம்சாவளியினால் அல்லது பதிவினால் பிரஜாவுரிமைப் பெறமுடியும் என்ற நிலை காணப்பட்டது. அதாவது, தந்தையும் பாட்டனாரும் இலங்கையில் பிறந்திருப்பின் அவர்கள் தம்முடைய பதிவினை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பிரஜை அந்தஸ்தைப் பெறமுடியும். ஆனால், பிறப்புப் பதிவுக் கட்டளைச் சட்டம் 1867ஆம் ஆண்டிலேயே இலங்கையில் நடைமுறைக்கு வந்தமையால் அதற்கு முன்னர் தந்தையும் பாட்டனாரும் பிறந்ததை அதிகமானோருக்கு நிரூபிக்கமுடியாமல் போனது. இதனால் பெருந்தோட்டத் தொழிலாளிகளான மலையகத் தமிழர்களில் பெரும்பாலானோர் தமது பிரஜை அந்தஸ்தை இழந்தனர். பின்னர் 1949ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய பாகிஸ்தானிய வதிவிடச் சட்டத்தின்கீழ் சிறுதொகை மலையகத் தமிழருக்கு பிரஜைகள் அந்தஸ்த்து கிடைக்கப்பெற்றன. அதன்பின்னர் நாடிழந்த மலையகத் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாகப் பல்வேறு சட்டங்கள், சட்ட சீர்திருத்தங்கள், ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. (Nadesan, 1993, சந்திரசேகரன், 1989, மோகன்ராஜ், 1984) அவற்றில் மலையகத் தமிழரின் வாழ்வில் தாக்ககரமான பாதிப்பினைச் செலுத்துவதாக சிறீமா–சாஸ்திரி ஒப்பந்தம் (1964) அமைந்தது. இவ் ஒப்பந்தத்தின் சாரம்சம் பின்வருமாறு:

01. இலங்கைப் பிரஜையாகவோ இந்தியப் பிரஜையாகவோ அங்கீகரிக்கப்படாமல் இலங்கையில் வசித்து வரும் இந்திய வம்சாவளியினர் அனைவரும் இலங்கையின் அல்லது இந்தியாவின் பிரஜைகளாக வேண்டும்

02. அத்தகைய நாடற்றோர் 975,000 பேர் இருக்கிறார்கள் எனவும் அவர்களில் 525,000 பேருக்கு 15 வருட காலத்தில் (அவர்களின் இயற்கையான அதிகரிப்புடன்) இந்தியா பிரஜாவுரிமை

வழங்குவதென்றும் அதேகாலத்தில் 300,000 பேருக்கு, அவர்களின் இயற்கை அதிகரிப்புடன் இலங்கை அரசாங்கம் இலங்கைப் பிரஜாவுரிமையினை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

03. எஞ்சியுள்ள 150,000 பேரின் அந்தஸ்து, எதிர்காலம் ஆகியன குறித்து இரு அரசாங்கங்களுக்கிடையே செய்துகொள்ளும் தனியான உடன்படிக்கை ஒன்றில் தீர்மானிக்கப்படும். (விரிவுக்கு: Nadesan, 1993: 191, Sahadevan, 1995: 144,145)

04. 1974இல் செய்துகொள்ளப்பட்ட சிறீமா-இந்திரா ஒப்பந்தத்தின்படி மீதமிருந்த 150 000 பேரைச் சமமாகப் பங்கிட்டு இந்தியாவும் இலங்கையும் 75 000 வீதம் பிரஜாவுரிமை வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது. (விரிவுக்கு: Sahadevan, 1995: 186,187)

பல அகமுரண்பாடுகளைக் கொண்டமைந்திருந்த சிறீமா-சாஸ்திரி உடன்படிக்கையை (விரிவுக்கு: எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள், 1984: 47,48) அமுலாக்கும் சட்டம் 1967இல் நிறைவேற்றப்பட்டது. அவ் அமுலாக்க விதிகள் 1970கள் வரை பெரிதும் கடைப்பிடிக்கப்பட்டன. ஆனால், அதுவரை இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததும் பெரும்பாலானோர் இலங்கைப் பிரஜைக்கே விண்ணப்பித்திருந்தமையும் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்திற்கு மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்பும் செயற்பாட்டைத் துரிதப்படுத்தத் தூண்டின. 1971 ஏப்ரல் கிளர்ச்சி, நிலச்சீர்திருத்த சட்டம் (1972), 1973இல் நாட்டில் பெருகிய பெரும் பஞ்சம், இந்திய அரசின் புனர்வாழ்வுப் பிரசாரங்கள், 1977இல் மலையகத் தமிழர்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் போன்றன மலையகத் தமிழர்களை இந்தியாவுக்குத் துரத்தின. (Nadesan, 1993: 211-233, தம்பையா, 1995: 25) "அமுலாக்கச் சட்டம் எவ்வாறிருந்தபோதும் நடைமுறையில் 'தேசிய இனவெறி' யினூடாக இந்தியர்கள் தமது இலங்கைப் பிரஜாவுரிமைக்கான மனுக்களை வாபஸ்பெற நிர்ப்பந்திக்கப்பட்டனர். பலர் தங்களது பிரஜாவுரிமையை ரத்துச் செய்து இந்தியா திரும்பினர். 'சுயநிர்ணய உரிமை' அடியோடு மறுக்கப்பட்டது. அவர்கள் உடன்படிக்கையினூடாக இந்தியா அனுப்புவதாக காட்டப்பட்டது." (எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள், 1984:54) இவற்றினைச் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் சாதுரியமாக நிகழ்த்தி முடித்தது.

சுதந்திர இலங்கையின் வரலாற்று எழுதியல்களில் பிரஜாவுரிமை பறிப்பு மற்றும் அதன் உடன்நிகழ்வுகள் சட்ட, உடன்படிக்கை உறுப்புரைகளின் உரையாடல்களாகவும் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்தோர், இலங்கையில் வாழ்வோர், அவற்றுள்ளும் இலங்கைப் பிராஜாவுரிமை அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டோர், பெறாதோர், அம்மக்களின் பொருளாதார நிலைமை, கல்வி வளர்ச்சி எனப் புள்ளிவிபரங்களின் பட்டியல்களாகவுமே பெரும்பாலும் அமைந்ததோடு அச்சட்ட ஏற்பாடுகளுக்குள் சிக்கித்தவித்த தனிமனிதர்களின் ஆத்மார்த்த எதிர்பார்ப்புக்களையும், அக, புறப் போராட்டங்களையும் பதிவு செய்வதில் பெரிதும் தவறிவிட்டன. ஆனால், பிரஜாவுரிமை பறிப்பு மற்றும் அதன் உடன்நிகழ்வுகள் குறித்த இலக்கிய வெளிப்பாடுகளில் அவை உணர்வுபூர்வமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதைக் காணலாம். குறிப்பாக, நாடற்ற அநாதையாக்கப்பட்ட மலையகத் தமிழர் அடைந்த துயர், அத்துயர் அவர்களது வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்கள், அதனால் விளைந்த மனித அவலங்கள் போன்றவற்றை மையமாகக் கொண்டு பல்வேறுவிதமான படைப்புக்கள் வெளிவந்துள்ளன. அப்படைப்புக்களில் மலையகத் தமிழரின் அக எண்ண வெளிப்பாடுகளையும் புறப் போராட்டங்களையும் கண்டு கொள்ள முடிகின்றது.

மலையகத் தமிழரின் புலம்பெயர்வும் இலக்கிய ஆக்கமும்

மலையகத் தமிழரின் புலம்பெயர்வும் அவை குறித்த இலக்கிய ஆக்கங்களும் பல்வேறு முக்கிய போக்குகளின் வெளிப்பாடாக அமைவதைக் காணலாம். காலனித்துவ காலத்தில் தொழில் நிமித்தம் இடம்பெற்ற புலம்பெயர்வு உலக முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும் அதனது அடிப்படை அபிலாசைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. பிரஜாவுரிமை பறிப்பு மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளால் திட்டமிடப்பட்டுப் புலம்பெயர்க்கப்பட்டமையானது மூன்றாம் உலக நாடுகளின் காலனித்துவ சுதந்திரத்துடன் மேற்கிளம்பிய இனக்காலனித்துவத்தையும் இடதுசாரிய எழுச்சிக்கு எதிரான அதிகார வர்க்கத்தினரின் திட்டமிட்ட செயற்பாடுகளின் விரிவாக்கத்தையும் உணர்த்தி நிற்கின்றன. அத்துடன் இந்திய அரசின் உள்ளீர்ப்பும் இலங்கையுடனான சமரசமும் புவிசார் அரசியல் நகர்வுகளையும் தேசிய அரச நலநாட்டத்தின் தீவிரத்தையும் வெளிப்படுத்திநிற்கின்றன.

வளர்ந்துவரும் முதலாளித்துவத்தின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இந்திய கிராமப்புற மக்களை புலம்பெயர வேண்டிய

நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கிய பிரித்தானிய காலனித்துவ நடைமுறைகளையும் (விரிவுக்கு: Kondapi, 1951, Nadesan, 1993, சிவசுப்பிரமணியன், 2006: 110,111) ஒப்பந்தத்தின் பின் புலம்பெயர்வில் ஏற்பட்ட வீழ்ச்சியினைத் தடுத்து, புலம்பெயர்வினைத் துரிதப்படுத்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்த செயற்பாடுகளையும், (Nadesan, 1993: 214-227, தம்பையா, 1995: 25) இந்திய அரசினுடைய உள்ளீர்ப்பு மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களுக்குப் பின்னாலான இந்திய தேசிய அரச நலனையும் (Nadesan, 1993: 189, Sahadevan, 1995: 143,144, எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள், 1984: 42) ஆராய்ந்து பார்க்கின்றபோது அண்மைக்காலங்களில் பெருகிவரும் மூன்றாம் உலக நாடுகளின் புலம்பெயர்வுகள், மனித உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு என்ற போர்வையில் மேலைத்தேய நாடுகள் மேற்கொள்கின்ற உள்ளீர்ப்பு ஆகியவற்றின் அரசியல் குறித்து மாற்று உரையாடல்களை முன்னெடுப்பது அவசியமானதாகும்.

மலையகத் தமிழரின் காலனித்துவ காலப் புலம்பெயர் இலக்கிய ஆக்கங்களானது தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய போக்குகளைத் தோற்றுவித்ததோடு, அதற்கு முற்பட்ட காலத்தில் உதிரியாகத் தோற்றம்பெற்ற புலம்பெயர் இலக்கிய ஆக்கங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தன்மைகளையும் கொண்டுள்ளன. அவ்விலக்கிய ஆக்கங்களே இன்று தமிழின் முக்கிய போக்காக வளர்ச்சிகண்டுள்ள புலம்பெயர் இலக்கியங்களுக்கு முன்னோடியாக அமைந்துள்ளமை இங்கு மனங்கொள்ளத்தக்கது.

மலையகத் தமிழரின் ஆரம்ப கட்டப் புலம்பெயர்வு குறித்த இலக்கியப் பதிவுகள் மிக அரிதாகவே கிடைத்துள்ளன. அச்சமூகத்தினரின் வாய்மொழி இலக்கியங்கள் அப்புலம்பெயர் அனுபவங்களைப் பேசும் முக்கிய ஆவணங்களாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக,

"ஊரான ஊரிழந்தேன் / ஒத்த பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே / பெத்த தாயே நாமறந்தேன்"
(வேலுப்பிள்ளை,ஸி.வி, 1976: 03)
"கூடை எடுத்ததில்லை – நாங்க / கொள்ளிமல பார்த்ததில்ல
கூடை எடுக்கலாச்சு – நாங்க / கொழுந்து மல பார்க்கலாச்சு"
(சாரல்நாடன், 1993: 24)
"அடி அளந்து வீடு கட்டும் நம்ம / ஆண்டமனை அங்கிருக்க
பஞ்சம் பொழைப்பதற்கு / பாற்கடலை தாண்டி வந்தோம்

பஞ்சம் பொழைச்சு நம்ம / பட்டணம் போய் சேரலியே
கப்பல் கடந்து / கடல் தாண்டி இங்க வந்தோம்
காலம் செழிச்சு நம்ம / காணி போய் சேரலியே" (மேலது: 25)

போன்ற வாய்மொழிப் பாடல்கள் அம்மக்களின் புலம்பெயர் வாழ்வின் சில அம்சங்களைப் பதிவுசெய்துள்ளதைக் காணலாம். அத்தோடு பிற்பட்ட கால மலையகத் தமிழரின் இலக்கியங்களில் வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு அலைவும் உலைவும் நிறைந்த அவர்களது புலம்பெயர் வாழ்வு பதிவுசெய்யப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக,

"பெற்ற தாயின் முன்புத்திரர் பிரிய / பிறந்தவர் பிரிவதால்சோதறி கதற
கற்றவரில்லா கயவர்கள் பேச்சைக் / கடவுளர் வாக்கெனக்கருதிய மனிதரும் ...
உற்ற உறவுகள் யாவையும் துறந்தும் / உடலையும் உயிரையும் விலை எனப் பேசி
நற்றவத் தாயாம் நாட்டினைப் பிரிந்து / நயனம் நீர்ப் பெருக்க நடுங்கியவாறு
பாய் மரம் தாங்கும் படகிலே ஏறுவர்... / அலைகடல் போல மனமும் கலங்கி
அக்கரை விட்டவர் இக்கரை சேர்வரே ... / மாதக் கணக்கில் கானகத்தூடே
மருண்டு நடந்து மாண்டவர் கொஞ்சமோ? / வன விலங்கினத்து உணவென ஆக
வந்தவர் எத்தனை வழுத்துதல் எளிதோ!...
கண்டித் தோட்டம் என முன் உற்ற / கலை நகர் 'மாத்தளை தமிழரூர்' அடையவும்
பண்டைத் தமிழர்கள் மன்னார் தொடக்கம் / பாதசாரியாய் 'குருநாகலை' வழியே

வந்ததை உணர்த்தும் மனித எலும்புகள் / வெண்தலை யோடுகள் வனங்களில் கிடக்குதே" (வேலுப்பிளை, ஸி.வி, 2007: 46-49)

இவ்வாறு வந்தடைந்த குழுமத்தினர் இலங்கையில் தனித்த ஒரு சமூகக் குழுமமாக உருப்பெற்ற பின்னர் அவர்களது இலக்கிய ஆக்கங்கள் "மலையகத் தமிழ் இலக்கியம்" என்ற தனித்த அடையாளத்தைப்

பெற்றுக்கொண்டதோடு இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் ஒரு முக்கிய கூறாகவும் விளங்குகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றுநிலை நின்று நோக்கும்போது காலனித்துவ காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, மொரிசியஸ், பீஜீ, தென்னாபிரிக்கா போன்ற பல நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றவர்களது இலக்கியப் பதிவுகளே தமிழ் இலக்கியத்தின் புழங்கு வெளியினை முதன்முதல் விரிவாக்கியதோடு இன்று பரவலாகக் கலந்துரையாடப்படுகின்ற புலம்பெயர் இலக்கியத்தின் உள்ளார்ந்த தன்மைகளையும் முதன்முதல் தமிழ் இலக்கியப் பரப்பில் வெளிப்படுத்தி நின்றன.

மலையகத் தமிழரின் இரண்டாம்கட்ட புலம்பெயர்வு குறித்த இலக்கியப் பதிவுகள் கணிசமான அளவில் வெளிவந்துள்ளன; வெளிவருகின்றன. அவ்வகை இலக்கியங்களை ஒப்பந்தத்தினால் தாயகத்திற்குத் திரும்புதல் என்று இந்தியாவுக்கு அனுப்பப்பட்டவர்களும், இலங்கையில் மலையகத்தைச் சார்ந்தோரும், பிறரும் படைத்துள்ளதோடு தமிழ்நாட்டு எழுத்தாளர்களும் சில படைப்புக்களைத் தந்துள்ளனர்.

தாயகம் திருப்பப்பட்டோரின் இலக்கிய ஆக்கங்கள்

ஒப்பந்தத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்ட புலம்பெயர்வுக்குத் தள்ளப்பட்டு, தமது ஞாபக அடுக்குகளில் மலையக மண்ணையும் வாழ்வையும் சுமந்து சென்றவர்களுள் சி.பன்னீர்செல்வம், அரு.சிவானந்தன், மு.சி. கந்தையா போன்றோரின் இலக்கிய ஆக்கங்கள் இலக்கியச் சூழலில் பலரது கவனத்தையும் பெற்றுள்ளன. இம்மூவரும் இலங்கையில் இருக்கும்போதே இலக்கியப் பிரவேசம் செய்தவர்களாவர். அவர்களுடைய படைப்புக்களில் சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் விளைவுகள், அதனால் ஏற்பட்ட மனித அவலங்கள், நாடிழந்த துயர், அகதி வாழ்வு, இந்தியப் புலம்பெயர் அவலம், இந்திய அரசின் போலித்தனங்கள் போன்றன உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவை அவர்களுடைய தனிமனித அனுபவங்களாகவும் புலம்பெயர்க்கப்பட்ட மலையகத் தமிழர்களின் கூட்டனுபவ வெளிப்பாடுகளாகவும் அமைந்துள்ளன.

சி.பன்னீர்செல்வம் ஒரு சாலையின் சரிதம், திறந்தே கிடக்கும் வீடு ஆகிய இரு கவிதைத் தொகுதிகளையும், திறந்த வெளிச்சிறைகள், ஜென்மபூமி, அகதிகள் தெரு ஆகிய மூன்று சிறுகதைத்

தொகுப்புக்களையும் விரல்கள் என்ற நாவலையும் தேயிலைப் பூக்கள் என்ற காவியத்தையும் தந்துள்ளார். மலையகத் தமிழரின் நாடிழந்த துயரும் புலம்பெயர் அவலமும் அப்படைப்புக்களின் அடிநாதமாக விளங்குவதோடு உலகந்தழுவிய மானுடநேயம் அவை முழுதும் படர்ந்துள்ளது. சி.பன்னீர்செல்வம் இலங்கையைவிட்டுப் புலம்பெயர கடைசிக்காலத்தில், (1973) எழுதிய 'துயர நதி சங்கமத்தில்...' என்ற கவிதை, சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கோரத்தையும் இத்தேசத்துடன் அவருக்கிருந்த ஆத்மார்த்த நெருக்கத்தையும் வெளிப்படுத்துவதாயுள்ளது. எடுத்துக்காட்டாக,

'... என்றிருந்தோ துயரமுடன் / எதிர்பார்த்த கொடும்பிரிவு
இன்றந்தோ என் பெயரை / அறை கூவி அழைக்கிறது...
இன்னும் சில நாட்கள் / அதிவிரைவாய்க் கழிந்தபின்னே
ஈழத்திலென் வாழ்க்கை / இறந்துவிட்டதோர் காலம்!
அலையெறியும் சமுத்திரமும் / ஆள் கடத்தும் 'இர்வின்'னும்
இதயமிலா வர்க்கத்தார் / இயற்றுகின்ற சட்டங்களும்
நம்முடைய உறவுகளை / நெடுந்துயரமாய்ப் பிரிக்கும்!...
என் பிரியதேசத்தீர்! / இறப்பதற்கு முன்னாலே
இங்கொருநாள் வருவேன்! / இன்றைக்குத் துயர் சுமந்து
அழுகைக் குமுறலுடன் / கரம் கூப்பி வணங்குகின்றேன்...
கடைசி விடை தாருங்கள்" (பன்னீர்செல்வம், சி, 2006)

இவ்வரிகள் கவிஞரின் தனிமனித அனுபவங்களையும் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்ட மலையகச் சமூகத்தினரின் கூட்டனுபவங்களையும் சுமந்து நிற்கின்றன. அத்துடன் இந்தியாவிற்குப் புலம்பெயர்ந்த பின்னர் அவரால் எழுதப்பட்ட 'இவர்கள்', 'குறுநதிக்கு ஒரு கடிதம்', 'கனவுவெளி மனிதர்கள்' போன்ற பல கவிதைகளிலும் நாடிழந்த துயர், புலம்பெயர் அவலம் போன்றன உருக்கமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத எதேச்சதிகாரம் நிறைந்த உடன்படிக்கையையும், அதனால் நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்வையும், அந்நிர்ப்பந்த வாழ்வில் மிகுந்திருந்த அவலத்தையும் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார் கவிஞர்.

"... மந்தையைப் போல / மனிதர்கள்
பிரிக்கப்பட்டுவிட்டார்கள் / தேசங்கள்
திணிக்கப்பட்டுவிட்டன! / ஜென்ம பூமியும்

ஜீவித பூமியும் / இரண்டே நபர்களால்
தீர்மானிக்கப்பட்டுவிட்டன! / தேயிலை வனங்களை
தேசமாய் நம்பிய / இலங்கை மண்ணின்
மலையகத் தமிழர் / இன்று
இந்தியத் தெருக்களில் / அகதிகளாகவும்
கோடையின் மலைகளில் / கொத்தடிமைகளாகவும்...'(மேலது)

'வண்ணச் சிறகு' என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் பரவலான கணிப்பைப் பெற்ற அரு. சிவானந்தன், 1977 ஆம் ஆண்டில் நாட்டைத் துறந்து தமிழகம் சென்றவராவார். அத்தொகுப்பில் உள்ள பல கவிதைகள் நாடிழந்த வாழ்வியலைப் பேசுகின்றன. குறிப்பாக, 1976ஆம் ஆண்டு நதி சஞ்சிகைகளில் வெளியான அவரது 'சென்று வருகின்றேன் ஜென்ம பூமியே' என்ற கவிதை சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தால் ஏற்பட்ட அனர்த்தங்களின் சாரத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது. 'தாம் பிறந்த மண்ணிலிருந்து நாடற்றவராக வெளியேற்றப்பட்ட இலட்சக்கணக்கானோரில் ஒருவரான இளங்கவிஞர் வண்ணச்சிறகு, மலையக மக்களுடைய கூட்டு அனுபவத்தையும் சொந்த அனுபவத்தையும் வெளிப்படுத்தும் சிறந்த கவிதைகள் பலவற்றை எழுதியிருக்கின்றார்') என்ற எம்.ஏ.நு.'.மானி(2014)ன் கூற்று இவ்விடத்தில் நோக்கத்தக்கது.

'நிசங்களின் சத்தம்' என்ற கவிதைத் தொகுப்பைத் தந்துள்ள மு. சி. கந்தையா 1977ஆம் ஆண்டில் தமிழகம் சென்றவராவார். அத்தொகுப்பில் உள்ள பல கவிதைகள் நாடற்ற அவலம், அவற்றைத் திட்டமிட்டு ஏற்படுத்திய அதிகார வர்க்கத்தினரதும் பேரினவாதிகளினதும் கொடுஞ்செயல்கள், அரசியல் போலித்தனங்கள், இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்தோரின் துயர வாழ்வு போன்றவற்றை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளன. எடுத்துக்காட்டாக,

இலங்கைப் பொருளாதார வண்டியில் / பல்லும் சில்லுமாகி
காப்பி தேயிலை / இறப்பருக்குள்
புதைந்தவர்களின் / வாரிசுகள்!
நாடுகள் விட்டு நாடுகள் / கடத்தப்பட்டு
'மேய்ப்பர்கள் இல்லாத' / மந்தைகளாகிப் போன
தலைமுறையின் / விழிகள் அலைகின்றன
மூலத்தின் முகவரியைத் / தேடி' (கந்தையா, 2010)

என ஒப்பந்தத்தினால் நாடுகடத்தப்பட்டவர்களின் துயரத்தைப் பேசுவதைக் காணலாம். அத்தோடு அவரது பல கவிதைகளில் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்த மலையகத் தமிழர் அனுபவிக்கும் அவல வாழ்வு பதிவுசெய்யப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இலங்கையில் மூன்று தலைமுறைகளாக வாழ்ந்து ஒரு துண்டு சொந்த நிலமுமற்று, இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்து ஆண்டுகள் பல கழிந்த பின்னும் அங்கும் ஒரு துண்டு நிலம்கூட சொந்தமற்றதாக்கப்படுகின்ற அவலத்தை பின்வரும் கவிதைப் பதிவுசெய்துள்ளது,

"துண்டு நிலங்களும் / சட்டத்தால் பறிக்கப்பட்டு
வாழ்வுரிமையை / இழக்கபோகும்
எங்களின் வரலாறு! / மீண்டும் ஓர்
அகதிகள் முகாமில் / தஞ்சம்
கோரும் என் / ஆறாம் தலைமுறை" (மேலது)

இவ்வாறு 1970களில் மலையகத்திலிருந்து புலம்பெயர்க்கப்பட்டவர்களில் சிலர் தமது புலம்பெயர் வாழ்வனுபவங்களை இலக்கியமாக்கியுள்ளதைக் காணலாம். அவற்றுள் சில இலங்கையில் புலம்பெயர் இலக்கியம் எனும் வகைமை முக்கிய கூறாக மேற்கிளம்பத் தொடங்கிய 1980களுக்கு முன்பே வெளிவந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனாலேயே "மண்ணை இழந்தவர்களின் குரலும், மண்ணைப் பிரிந்து போனவர்களின் குரலும், மண்ணுக்காய் போராடியவர்களின் குரலும் முதன்முதலாய் இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில் மலையகக் கலை இலக்கியங்களிலேயே ஒலித்தன" என்று மேமன்கவி(2014:86) கூறுகின்றார். எனவே, தமிழில் புலம்பெயர் இலக்கியம் என்ற வகைமை, அதன் வளர்ச்சி, இலங்கைத் தமிழ் புலம்பெயர் இலக்கியம் போன்றன குறித்த கருத்தாடல்களில் மலையகத் தமிழ் இலக்கியத்திற்கும் மிகமுக்கிய இடமுண்டு என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

புலம்பெயர்வு குறித்த ஏனையோரின் படைப்புக்கள்

பிரஜாவுரிமை பிரச்சினை மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் மலையகத் தமிழர்களாலும் பிறராலும் பல படைப்பாக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் சிக்கன்ராஜுவின் தாயகம், தெளிவத்தை ஜோசப்பின் பாலாயி, மாத்தளை கார்த்திகேசுவின் வழி பிறந்தது, மாத்தளை சோமுவின் எல்லை தாண்டா அகதிகள், யோ. பெனடிக்பாலனின் சொந்தக்காரன், தி.ஞானசேகரனின்

குருதிமலை, லயத்துச்சிறைகள், க. சதாசிவத்தின் மூட்டத்தினுள்ளே போன்ற நாவல்கள் குறிப்பிட்டுக் கூறத்தக்கனவாகும். அத்தோடு தமிழ்நாட்டு எழுத்தாளரான ராஜம் கிருஷ்ணனின் மாணிக்ககங்கை என்ற நாவலிலும் மலையகத் தமிழரின் நாடிழந்த துயர் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (விரிவுக்கு: அருணாசலம், 1999)

மலையகக் கவிஞர்களில் தமிழோவியன், குறிஞ்சித் தென்னவன், அல் அஸ்மத், சு. முரளிதரன் எனப் பலரது கவிதைகளிலும் நாடிழந்த துயரும் அதற்குள் சிக்கித் தவித்தவர்களின் உணர்வுகளும் உருக்கமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, இலங்கையில் பிறந்து, வளர்ந்து இந்தியாவுக்கு ஒருதடவை கூட சென்றிராத பலரும் ஒப்பந்த நிமித்தம் இந்தியாவுக்குப் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டு செய்வதறியாது தினறியுள்ளதை சு. முரளிதரன் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

'... மலைகளே / தேயிலை மரங்களே
நீங்கள் சொன்னால் / போதும்
பிரியத்தான் வேண்டுமா / உரிய பூமியை?..
ஒப்பந்தமுள்முடி / சூடியே ஆகவேண்டுமென
ஒட்டாரம் / பிடித்தால்
வாருங்கள் தோழர்களே / அன்னைக் கர்ப்பத்தில்
மீண்டும் புகுந்துகொள்வோம் / அப்பாக்கள் இளமையாகிப் பதில்
சொல்லட்டும்' (முரளிதரன், 1990)

இவ்வாறு ஒப்பந்தம் நிர்ப்பந்தித்த புலம்பெயர்வு குறித்து பல்வேறு படைப்புக்கள் வெளிவந்துள்ள போதிலும் 1980களில் உக்கிரம் பெற்ற இனமுரண்பாட்டுப் போரினால் புலம்பெயர்ந்த மலையகத் தமிழர்களிடத்திலிருந்தும், அப்புலம்பெயர் வாழ்வு குறித்தும் காத்திரமான படைப்புக்கள் எவையும் வெளிவராத நிலையே தொடர்கிறது. இனமுரண்பாட்டு யுத்த காலத்தில் புலம்பெயர்ந்த மாத்தளை சோமு பல படைப்புக்களைத் தந்துள்ளபோதும் அவற்றுள் இனமுரண்பாட்டுப் போரினால் புலம்பெயர்ந்த மலையகத் தமிழரின் வாழ்வியல் உருக்கமாக வெளிப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர்ந்த மனம்: ஒப்பந்த புலம்பெயர்வும் யுத்தகால புலம்பெயர்வும்

சுதந்திர இலங்கையில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இடம்பெற்ற மலையகத் தமிழரின் புலம்பெயர்வு, இனமுரண்பாட்டுப் போரினால் இடம்பெற்ற தமிழர்களின் புலம்பெயர்வு எனப் பிரதானமாக இரு வகைகளில் தமிழர்களின் புலம்பெயர்வு இடம்பெற்றுள்ளன. அவற்றுள் இனமுரண்பாட்டு யுத்தத்தினாலான புலம்பெயர்வே சர்வதேச அளவில் பெருங்கவனத்தை ஈர்த்தது. இவ் ஈர்ப்பிற்கு பல்வேறு காரணிகள் அடிப்படையாக அமைந்தன. குறிப்பாக, இனமுரண்பாட்டு யுத்தத்தினாலான புலம்பெயர்வு இந்தியாவிற்குள் மட்டுமன்றி உலகம் முழுதும் பரந்து இடம்பெற்றமை, யுத்தத்தினால் ஏற்பட்ட புற இழப்புக்கள், புலம்பெயர்ந்தவர்களின் கல்விப் பின்புலம், தொடர்ந்து நாட்டில் இடம்பெற்று வந்த போராட்டச் சூழல், ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்டுவந்த அடக்குமுறைகள், மனித உரிமைகள்சார் செயற்பாடுகளின் வளர்ச்சி முதலியவற்றையும் இவையெல்லாவற்றுக்கும் மேலாக புவிசார் மற்றும் பிராந்திய அரசியல் அசைவுகளையும் இங்கு முக்கிய காரணிகளாகக் குறிப்பிடலாம். அத்தோடு மலையகத் தமிழர்களின் புலம்பெயர்வு திட்டமிட்டு ஒப்பந்த அடிப்படையில் இடம்பெற்றமையால் புற இழப்புக்கள் குறைவு, மலையகத் தமிழர்கள் தமது தாயகத்திற்கே திரும்புகிறார்கள் என்ற மனோநிலை, புலம்பெயர்வு தமிழகத்திற்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டமை, புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அதிக கல்விப் பின்புலம் அற்ற தொழிலாளர்களாக இருந்தமை, நாடற்ற அநாதைகளாக்கப்பட்டமையால் அரசியலில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டமை, உள்நாட்டில் மலையகத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பாரிய போராட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படாமை, இந்திய அரசினுடைய உள்ளீர்ப்பு - புனர்வாழ்வுத்திட்டங்கள் போன்ற பல காரணங்களால் மலையகத் தமிழர்களின் புலம்பெயர்வு சர்வதேச அளவில் கனதியான உரையாடல்களைத் தோற்றுவிக்கவில்லை எனலாம். ஒப்பீட்டளவில் இவ்விரு புலம்பெயர்வுகளிலும் இனமுரண்பாட்டு யுத்தத்தினாலான புலம்பெயர்விலேயே 'புற இழப்புக்கள் அதிகம்,' 'பெருந்துயரம் மிகுந்தது' போன்ற கருத்துக்கள் பரவலாக வழக்கில் உள்ளன. அவ்வாறு கருதப்பட்டாலும் இவ்விரு சாராரினதும் அக இழப்புக்கள் ஒத்தவை, உணர்ச்சி வெளிப்பாடுகள் சமாந்திரமானவை என்பதற்கு அவர்களது இலக்கிய வெளிப்பாடுகள் தக்க சான்றுகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக,

"... இன்னும் எத்தனை நாள் / இந்துக்கடல் மடியில்
வாடையும் மீட்ட இசைக்கின்ற / மரகத வீணையென
வடகிழக்காய் நீண்ட என் தாய்நாட்டை / நெஞ்சில் சுமந்து சுமந்து
நான் ஏங்குவது?
நாட்டேக்கம் என்னுயிரை / நஞ்சாய் சபிக்கிறதே..." (ஜெயபாலன், 1989)

எனும் இனமுரண்பாட்டு யுத்தத்தினால் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் மனவுணர்வினை வெளிப்படுத்துகின்ற வ.ஐ.ச. ஜெயபாலனின் மேற்படி கவிதையும்,

எனது தேசத்து மண்ணில் சாவதே / எனக்குப் போதும்
அதற்குள் புதைக்கப்படுவது / எனக்குப் போதும்
உருகி / அந்த மண்ணுடன் கலந்து
மறைந்து போவது / எனக்குப் போதும்
பின் / ஒரு பூவாக மலர்ந்து
என் நாட்டின் குழந்தை ஒன்றினால் / விளையாடப்படுவது
எனக்குப் போதும் / என் நாட்டின் அணைப்பில் இருப்பது
எனக்குப் போதும் / எனது தேசத்தின் புனித முற்றத்தில்
ஒரு கைபிடியளவு புழுதியாய் / ஒரு புல்லின் இதழாய்
ஒரு பூவாய் இருப்பது / எனக்குப் போதும் (எம்.ஏ. நு.ஃமான் (மொ.பெ), 2008)

எனும் பலஸ்தீனிய அகதி வாழ்வின் அவலத்தையும் அவர்களது ஆத்மார்த்த எதிர்பார்ப்பினையும் உணர்வுபூர்வமாகப் பேசும் ஃபத்வா துக்கானின் இவ்வரிகளும் உலகெங்கிலும் அகதியாகியுள்ள ஒட்டுமொத்த ஆன்மாக்களின் குரலாகவே ஒலிக்கின்றன. ஒருவகையில் அகதிவாழ்வு வாழ நேர்ந்த எல்லாச் சமூகத்தினரதும் ஒட்டுமொத்தப் படைப்பினதும் இயங்குதளம் இக்கவிதைகளின் பொருண்மையோடு இயைந்ததாகவே அமைந்துள்ளதைக் காணலாம். இதற்கு கடந்த நூற்றாண்டில் சட்ட அங்கீகாரத்துடன் நாடற்ற அகதியாக்கபட்ட மலையகத் தமிழரினது அகதிவாழ்வு தொடர்பான படைப்புக்களும் விதிவிலக்கல்ல. அவர்களது உணர்வுகளும் இப்பொருண்மைக்குள்ளேயே கொந்தளிக்கின்றன. எடுத்துக்காட்டாக,

"சென்று வருகின்றேன் / மலைத்தொடர்களே
திரும்பவும் நான் உன்னை / என்று காண்குவேனோ

சென்று வருகின்றேன் / தோழர்களே
திரும்பவும் நாம் ஒன்றாய்/ என்று மலையேறுவோமோ
சென்று வருகின்றேன் / கொற்றகங்கையே
திரும்பவும் உன்மேனியில் / என்று நீராடுவேனோ
சென்றுவருகின்றேன் / ஜென்மபூமியே
திரும்பவும் உன் வெளிகளில் / என்று ஓடி மகிழ்வேனோ' (சிவானந்தன், 1976)

என்ற அரு. சிவானந்தனின் பிறந்த மண்ணைப் பிரிந்து செல்வதன் வேதனை, வலி என்பவற்றோடு அம்மண்ணிலேயே வாழத் துடிக்கும் தவிப்பினை வெளிப்படுத்தும் ஏக்கப்பெருமூச்சான கவிதையும்

நான் / ஒவ்வொருநாளும் அலைந்து திரிகின்றேன்
என் ஜென்மபூமியை இரைமீட்டபடி... / மலைத்தொடர்களுக்குள்
கனவு விதைக்கும் பசுந்தேயிலைகள்; / குளிர்மேகம் தரை இழைய
குதித்துவரும் எழில் அருவி / ஏலக்காடுகளிலும் மூங்கில் பற்றைகளிலும்
இசை சேகரிக்கும் காற்று...
இன்று / காட்டாற்றுவெளியிலும்
குளம்பொலி கேட்காத / குதிரைச் சிலையின் காலடிகளிலும்
என் ஜென்மபூமிக் கனவுகள் / சிதறிக் கிடக்கின்றன' (பன்னீர்செல்வம், 2010)

என்ற பன்னீர்செல்வத்தின் அந்நிய வெளியில் சிதறிக்கிடக்கும் ஜென்மபூமி ஏக்கமும் மேலே குறிப்பிட்ட வ.ஐ.ச.ஜெயபாலன் மற்றும் ஃ.பத்வா துக்கான் ஆகியோரின் கவிதைகளின் உணர்வும் ஒரே உணர்வுத் தளத்தில் பயணிப்பதைக் காணலாம். எனவே, புலம்பெயர்ந்த ஆன்மாக்களின் அகமன இழப்பும் ஆழ்மனத் தேடலும் பெரிதும் சமாந்தரமானவையாகவே விளங்குகின்றமை அவதானிக்கத்தக்கது.

மலையகத் தமிழரின் புலம்பெயர்வும் சிறுகதையாக்கமும்

பிரஜாவுரிமைச் சட்டத்தினால் நாடற்ற அநாதைகளாக்கப்பட்டோர், பின்னர் கொண்டுவரப்பட்ட உடன்படிக்கைகளினால் தம்மை இலங்கைப் பிரஜையாகவோ இந்தியப் பிரஜையாகவோ பதிவுசெய்துகொள்ள முயற்சித்ததோடு, பெரும்பாலானோர் இலங்கை அரசு தமக்கிழைத்த கொடுமையினால் தாய்நாடு தம்மை வாழவைக்கும் என்ற ஆசையில்

இந்தியப் பிரஜை அந்தஸ்திற்கு விண்ணப்பித்தனர். ஆனால், தம் உணர்ச்சியின் ஆவேசம் தணிந்த பிறகு அவர்களும் தம்மை இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்துகொள்வதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ளலாயினர். (ஜெயசீலன், 2014:320) அத்தோடு அக்கால இலங்கை அரசாங்கமும் அதிகரித்த இலங்கைப் பிரஜைக்கான விண்ணப்பங்களை நிராகரிக்கவும், இந்தியாவுக்கு அனுப்பப்படுவோரின் எண்ணிக்கையைப் பெருக்கவும் முயற்சிகளை மேற்கொண்டன. இதனால் மீளமீள பிரஜாவுரிமைக்கான மனுக்களை சமர்ப்பித்தல், போலி விசாரணைகள், மனு எழுதுதல் முதல் விசாரணை வரையான கையூட்டு, எதிர்பார்ப்பு, ஏமாற்றம் என அவலங்களும் அவமானங்களும் மலையகத் தமிழர்களை தொடர்ந்தும் சிதைத்தன. ஆனால், பெரும்பாலான மலையகத் தமிழரின் உள்ளுணர்வு இலங்கைப்பிரஜை அந்தஸ்த்துக்காக ஏங்கிக்கிடந்தது, அவமானங்களை சகஜமாகக் கடந்து சென்றது. இவற்றினைப் பல கதைகள் உணர்வுபூர்வமாகப் பதிவுசெய்துள்ளன.

உதாரணமாக, செந்தூரனின் "உரிமை எங்கே?" என்ற கதையானது, சுப்பையா நாயக்கர் என்ற தோட்டத் தொழிலாளி, இலங்கைப் பிரஜை என்ற அந்தஸ்தைப் பெற அனுபவித்த அவலங்களையும் அவமானங்களையும் யதார்த்தபூர்வமாகப் பதிவு செய்துள்ளதைக் காணலாம். அதாவது, பறங்கிமலைத் தோட்டத் தொழிலாளியான சுப்பையா நாயக்கருக்கு "உனக்கும் உன் குழந்தைகளுக்கும் பிரசா உரிமை தரப்படும். கண்டியில் வந்து பிரசா உரிமைக் கமிஷனர் முன்னிலையில் சத்தியம் செய்து பிரசா உரிமைச் சர்டிபிகேட்டைப் பெற்றுக்கொள்ளவும்" (குணராசா, 2010:261) என்று திகதியும் குறிப்பிட்டு கடிதம் கிடைத்தது. அக்கடிதத்தைப் பெற்றுக்கொள்ள சுப்பையா நாயக்கர் அனுபவித்த துயரங்களைப் பின்வருமாறு பதிவு செய்கிறார் ஆசிரியர்:

> *'எத்தனை ஆண்டுகள் அந்த ஒரு கடிதத்திற்காக அவர் தவியாய் தவித்தார். ஓராண்டா? ஈராண்டா? பத்தாண்டுகள் எப்படியோ ஓடி மறைந்துவிட்டன... சுமார் பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் - பிரசா உரிமைச் சட்டம் வந்த புதிதில் - தம்மையும் தம் குடும்பத்தையும் இலங்கைப் பிரசைகளாகச் சேர்த்துக் கொள்ளுமாறு மனுப்போட்டவர்களில் அவரும் ஒருவர். மனுப்போட்டதும் உரிமை கிடைத்துவிட அவரென்ன இலட்சாதிபதியா? எத்தனை விசாரணைகள்? எவ்வளவு பணம் செலவு. அலைச்சல்? அப்பப்பா, அவர் தம்*

பிறப்புரிமையைப் பெறும் பொருட்டு பஸ்களுக்கும் கடிதம் எழுதுபவர்களுக்கும் தபால் அலுவலகத்திற்கும் கொடுத்த பணம் இன்று அவரிடம் இருந்திருந்தால் குறைந்தது ஐந்து ஏக்கர் தேயிலைத் தோட்டத்திற்காவது அவர் அதிபதியாக இருந்திருப்பார்! பாவம் இத்தனை இன்னல்களுக்குப் பின்னர், ஒரு நாள் அந்தக் கடிதம் வந்தது.'(மேலது: 261)

இவ்வாறு பல்வேறு இன்னல்களுக்குப் பிறகு எதிர்பார்த்த கடிதம் கிடைத்தும், கச்சேரிக்குச் சென்ற பிறகு கடிதமானது பறங்கிமலை எட் கங்காணிக்குரியது எனக்கூறிய கமிஷ்னர் சாதாரணமாக மன்னிப்புக்கேட்டு, சுப்பையா நாயக்கரைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்.

'கமிஷனர் ஏதோ சாதாரணமாக மன்னிப்புக் கேட்டுவிட்டார். ஆனால், நாயக்கருக்கோ, அவரது ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு அம்பாக உள்ளத்தில் பாய்ந்தது. எண்ணிய எண்ணங்கள், கட்டிய கோட்டைகள், அத்தனையும் ஒரு நொடிப்பொழுதில் தூள்தூளாயின. தலை சுற்றியது. உலகமே அவரை எண்ணி நகைப்பதாக அவர் எண்ணினார். திரும்பிய பக்கமெல்லாம், "கள்ளத்தோணி! கள்ளத்தோணி!!" என்ற சப்தம் கேட்பதாகவே அவரது பேதை உள்ளம் எண்ணித் தடுமாறியது. ஏதேதோ பிதற்றினார். சிரித்தார், அழுதார்" (மேலது: 269) என சுப்பையா நாயக்கரின் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் உருக்கமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு இவ் அவல நிலையே மலையகம் முழுவதும் தொடர்ந்தது என்பதைக் கதையின் ஈற்றுப்பகுயில் வரும் 'தலதா மாளிகை நெருங்க நெருங்க நடுப்பகல் பூசையின் மணியோசை "டாங்...! டாங்...! என்று பலமாக ஒலித்தது. ஒவ்வொரு ஒலியும் "உரிமை எங்கே? உரிமை எங்கே?' என்று நாயக்கரின் செவியில் மாத்திரமல்ல, மலைநாடு முழுவதுமே கேட்பது போல இருந்தது' (மேலது: 269, 270) என்ற சித்திரிப்பு உணர்த்துகிறது.

பிரஜாவுரிமையை பெறுவதற்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வேண்டும் என தீர்மானிக்கப்பட்ட பிறகு, பிறப்புப் பதிவிற்கான முறையான ஒழுங்கமைப்புகள் மேற்கொள்ளப்படாத வெள்ளைக்கார சூப்பிரண்டன் ஆட்சியில் பிறந்து வளர்ந்த மலையகத் தமிழர்கள் பலர் தமது பிறப்புப், பதிவினை உறுதிப்படுத்த முடியாமல் திண்டாடியதையும்

மனம் நொந்து சோர்ந்து போனதையும் காளிமுத்துவின் பிரஜாவுரிமை என்ற கதையின் மூலம் கண்டுகொள்ள முடிகிறது. தமது சொந்த வியர்வையையும் இரத்தத்தையும் பாய்ச்சி, சந்ததி சந்ததியாகப் பண்படுத்திவந்த தோட்டங்கள் இருக்கும்போதே பிறப்பு அத்தாட்சி கேட்பதால் செய்வதறியாது திணறும் காளிமுத்து என்ற தொழிலாளியின் மனப்போராட்டம் ஒட்டுமொத்த மலையகத் தமிழரின் மனப்போராட்டமாக விரிவடைவதைக் காணலாம்.

'ஐயா துரைமார்களே, இது என் பாட்டனாரின் கை எலும்பு, எத்தனையோ வருசங்களுக்கு முன்னே அவர் இங்கு புதைக்கப்பட்டவர். என்னை இலங்கைப் பிரஜையாக்க உங்களுக்கு இந்த அத்தாட்சி போதவில்லையென்றால் - என்னை இந்தக் குழியிலே வைத்து உங்கள் கையினாலேயே மண் தள்ளிவிட்டு புதையுங்கள்' (உழைக்கப் பிறந்தவர்கள், 1997: 373) என அமையும் காளிமுத்துவின் அவஸ்தைகளும் தவிப்புக்களும் தன்னை இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்வதில் அவருக்கிருந்த ஆர்வத்தையும், பிறந்து வளர்ந்து வளப்படுத்திய மண்ணின் மீதான நெருக்கத்தையும் உணர்த்துகின்றன. ஆனால், அரசாங்கமானது அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது அவர்களை நாடுகடுத்துவதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தியது. இதனால் பல்லாயிரக்கணக்கானோரின் ஆன்மாக்கள் பறித்தெடுக்கப்பட்டு, காயப்பட்ட இதயங்களுடன் கப்பலேற்றப்பட்டனர்.

இந்தியப் புலம்பெயர் வாழ்வின் அலைவும் உலைவும்

இலங்கையில் மலையகத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட ஒடுக்குமுறைகளின் போதெல்லாம் இந்தியா தமக்குப் புதுவாழ்வளிக்கும் என்ற எண்ணங்கொண்டு, மலையகத் தமிழர்கள் இந்தியாவிற்கே பெரிதும் புலம் பெயர்ந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு இந்தியா வுடனான பூர்வீகத் தொடர்பும், அங்குள்ள உறவுகளும், இலங்கை-இந்திய ஒப்பந்தமும், இந்திய அரசு அளித்த புகலிடமும், அம்மக்களின் பொருளாதார நிலைமைகளும் பிரதான காரணங்களாக அமைந்தன எனலாம்.

காலனித்துவ காலத்தில் புதுவாழ்வைத்தேடி இலங்கை வந்து மீளாத்துயரில் மூழ்கித் தவித்தவர்களின் மூன்றாம் தலைமுறை, உடன்படிக்கையின்கீழ் தாம் பிறந்து வளர்ந்து, வளப்படுத்திய மண்ணையும், உறவுகளையும் பிரிந்து புதுவாழ்வைத்தேடி

இந்தியாவிற்குப் புலம்பெயர்ந்துள்ளனர். ஆனால், அங்கும் அவர்களது வாழ்வு பெருந்துயர்படிந்ததாகவே அமைந்திருந்ததை ஆய்வுகள் காட்டுகின்றன. அவ்வகையான ஆய்வுகள் பெரிதும் "அம்மக்களின் வாழ்க்கை நிலவரத்தை ஐரோப்பியாவிலுள்ள சமூகசேவா நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டி, அவர்களுக்குப் பொருளாதார உதவிகள் பெற்றுக்கொடுக்கும் நோக்கோடு செய்யப்பட்டவையாக இருந்ததால் அந்த ஆய்வுகளில் அதிகமாகப் புள்ளிவிபரங்கள் இடம்பெற்றனவேயன்றி, அம்மக்களின் 'இதயங்கள்' புலப்படவில்லை" (எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள், 1984) ஆனால், அம்மக்களாலும் பிறராலும் படைக்கப்பட்ட இலக்கிய ஆக்கங்களில் அவர்களின் காயப்பட்ட இதயங்களின் வலிகளைக் காணமுடிகின்றது. அவ்வகையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சிறுகதைகளில் வெளிப்படும் புலம்பெயர்ந்த மலையகத் தமிழரின் அலைவும் உலைவும் நிறைந்த வாழ்வியல் அம்சங்களைப் பின்வருமாறு நோக்கலாம்:

புலம்பெயர்ந்த முறையும் பிரிவினரும்

சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தாலும் பின்னர் இடம்பெற்ற இனமுரண்பாட்டு யுத்தத்தாலும் பல்வேறு வகைகளில் மலையகத் தமிழரில் வெவ்வேறு திறத்தினர் புலம்பெயர்ந்து சென்றுள்ளதை இச்சிறுகதைகள் பதிவுசெய்துள்ளன. அவற்றினைப் பின்வருமாறு நோக்கலாம்:

01. பிரஜாவுரிமை இழந்து நாடற்ற அநாதைகளாகியோர் சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் இந்தியப் பிரஜைக்கு விண்ணப்பிக்கலாம் என்றதும் இந்தியப் பிரஜைக்கு விண்ணப்பித்து இந்தியா சென்றவர்கள். (கந்தசாமி ஊருக்குப் போகிறான், ஒப்பாரிக்கோச்சி)

02. இலங்கையில் வாழ்ந்தாலும் இந்தியாவை தமது ஜென்மபூமியாகக் கருதியவர்கள் (ஜென்மபூமி, சுட்ட மண்ணும் சுடாத மண்ணும், காணாமல் போன நதிகள், பிறந்தமண்)

03. இலங்கைப் பிரஜாவுரிமை அந்தஸ்து மறுக்கப்பட்டதால் இந்தியாவுக்குச் செல்ல நிர்பந்திக்கப்பட்டவர்கள். அவ்வகையினர் இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்வதற்கான தகுந்த ஆதாரங்கள் இல்லை என விசாரணைகளின்போது முடிவுசெய்யப்பட்டவர்களாகவும் தமது பெற்றோர்கள் ஆரம்பத்தில் இந்தியப் பிரஜைக்கு விண்ணப்பித்திருந்ததால் பிள்ளைகளுக்கு இலங்கைப் பிரஜை அந்தஸ்து

மறுக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். அவ்வாறு பிரஜாவுரிமை மறுக்கப்பட்டவர்கள் இருவகைகளில் புலம்பெயர்ந்துள்ளனர்.

i) பிரஜாவுரிமை மறுக்கப்பட்டதும் தமக்கு இலங்கையில் வசிப்பதற்கு வழங்கப்பட்ட காலத்திற்குள் தமது குடும்பத்துடன் இந்தியாவுக்குப் புலம்பெயரல். (பிரிந்து செல்லும் ஒரு தோழன், அவர்களின் தேசம், மதுர கீதம்)

ii) இலங்கையில் வசிப்பதற்கு வழங்கப்பட்ட விசாக் காலம் முடிவடைந்தும் புலம்பெயராது இருந்தவர்களை அரசு கைது செய்து இந்தியாவுக்கு நாடுகடத்தல் (ஒப்பாரிக்கோச்சி, நடுக்கடலில்)

04. இந்தியப் பிரஜைக்கு விண்ணப்பிக்காமலும் இலங்கைப் பிரஜை அந்தஸ்து மறுக்கப்பட்டும் நாடற்ற அநாதைகளாகியோர் வாழ வழியற்று தமது முன்னோர்களின் சொத்தைத் தேடி இந்தியாவுக்குச் செல்லல். (முன்னவன் சொத்து)

05. இனமுரண்பாட்டு யுத்தத்தினாலும் வன்செயல்களாலும் புலம்பெயர்தல். குறிப்பாக, பேரினவாதிகளால் மலையகத் தோட்டங்களில் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட வன்செயல்களால் பலர் புலம்பெயர்ந்ததோடு (கப்பல் எப்பங்க) பாதுகாப்புக் கருதியும் தொழிலுக்காகவும் வடக்கு நோக்கி இடம்பெயர்ந்து வாழ்ந்தவர்கள் அங்கு நிலவிய போராட்டச் சூழலாலும் புலம்பெயர்ந்துள்ளனர். (குத்தகை)

இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றவர்களில் இந்தியாவிலிருந்து இலங்கை வந்தவர்களும் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர்களும் விபரம் புரியாத பருவத்தினரும் உள்ளடங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுள் இந்தியாவிலிருந்து வந்தவர்களே தமது ஜென்மபூமியாக இந்தியாவைக் கருதித் திரும்பிச் சென்றுள்ளனர்.

புலம்பெயர் மனச்சிக்கலும் பிரிவுத் துயரும்

'நாடற்ற அகதியாகி திசைதெரியாதிருந்த மலையகத் தமிழரில் பலர் ஆரம்பத்தில் தம்மை இந்தியப் பிரஜையாக பதிவு செய்வதில் ஆர்வம் மிக்கவர்களாகவே விளங்கினர். ஆனால், தம் உணர்ச்சியின் வேகம் தணிந்தபிறகு தாம் மேற்கொண்ட முட்டாள்தனமான அச்செயலுக்காக வருந்தியதோடு அவர்களது பிள்ளைகளும் அதனை ஆத்மார்த்தமாக வெறுத்தனர். பிறந்து வளர்ந்த மண்ணின் மீதான நெருக்கமும் முதற்கட்டங்களில் இந்தியா சென்றவர்களின் துயரவாழ்வும் அவர்களுக்கு

புலம்பெயர்வதில் மனச்சிக்கல்களைத் தோற்றுவித்தன எனலாம். இந்நிலைமையால் அவர்களுக்கு இலங்கையில் வசிப்பதற்கு வழங்கப்பட்ட விசாக் காலம் முடிவடைந்தும் அவர்கள் நாட்டைவிட்டு புலம்பெயர மனமில்லாது தவித்தனர். ஆனால், அரசானது சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை இந்தியாவிற்கு நாடுகடத்தியது.' (ஜெயசீலன், 2014:321) இந்நிகழ்வுகள் யாவற்றையும் சோகவுணர்வுடன் பல சிறுகதைகள் வெளிப்படுத்தியுள்ளன. எடுத்துக்காட்டாக, சிறீமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கொடுமையையும் வழி தெரியாமல் அனுபவித்த துயரத்தால் ஆக்ரோஷமடைந்த பெற்றோர்கள் உணர்ச்சிவசப்பட்டு எடுத்த முடிவினையும் பின்னர் அம்முடிவினை எண்ணி வருந்துவதையும் ஒப்பாரிக்கோச்சி என்ற கதையில் பினவருமாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

> *"இலங்கையில் சிறீமா ஆட்சி வந்தது. இந்தியாவில் லால் பகதூர் சாஸ்திரி ஆட்சி வந்தது. இரண்டு நாட்டுப் பிரதம மந்திரிகளும் இந்தியத் தமிழர்களைப் பங்கு வைக்கும் ஒரு பண்டமாற்று ஒப்பந்தத்தைப் போல் ஒப்பந்தம் எழுதி, மக்களை பங்கு வைத்துக் கொண்டனர். வழி தெரியாமலும்... அனுபவித்த துயரத்தாலும் '...தாய், தகப்பன் பொறந்த நாட்டுக்கே போயி சேருவோம்..' என்ற ஆக்ரோஷத்தால், இந்தியக் குடியுரிமைக்கு மனு போட்டவர்களில் சுப்பிரமணியத்தின் தகப்பன் சிவசாமியும் ஒரு ஆளாகும். இந்தியாவுக்கு விண்ணப்பம் செய்துவிட்ட பிறகுதான் 'மடையன் மாதிரி தவறு செஞ்சுபுட்டேன் ராக்கம்மா..!' என்று மனைவியின் கைகளைப் பிடித்துக்கொண்டு பிள்ளைகளுக்குத் தெரியாமல் அழுதார்." (சிவலிங்கம், 2010: 4,5)*

மேலுமொருசாரார் பிறந்து, வளர்ந்து தாமே வளப்படுத்திய மண்ணின் மீதான பிணைப்பினை அறுத்தெறிய மனமில்லாது இந்தியப் பிரஜை அந்தஸ்து கிடைத்து, தனது குடும்பத்தினர் யாவரும் இந்தியா சென்ற பின்னரும் புலம்பெயராது தனித்து நின்று அல்லலுற்றுள்ளனர். எடுத்துக்காட்டாக, தனது முழுக்குடும்பமும் இந்தியாவிற்குச் சென்ற பிறகும் வயது முதிர்ந்த காலத்திலும் தனித்து நின்று துன்பமுறும் அம்மாசி, "நான் பிறந்தது இந்த மண்ணுங்க: ஓடி ஆடி பெரியவனானதும் எல்லாமே இந்த மண்ணுங்க. நானுங்க இந்த மண்ணிலே பிறந்து, இந்த மண்ணையே இந்த இரண்டு கையாலேயே வளப்படுத்தி

இருக்கேணுங்க... நான் நட்ட மரங்களைப் பார்க்கிறபோது, நான் கான்வெட்டி, முள்ளுப்போட்டு, வளம்படுத்தின நிலத்தில செழித்து, தளிர்த்து நிக்கிற தேயிலை செடிகளைப் பார்க்கிற போது என்ர புள்ளையளை பார்க்கிறமாதிரி இருக்குதுங்க..” (உழைக்கப் பிறந்தவர்கள், 1997: 476) எனப் புலம்பி புலம்பெயர மறுக்கிறான்.

இவ்வாறு இந்தியப் பிரஜை அந்தஸ்தைப் பெற்றவர்கள் இலங்கையை விட்டுப் புலம்பெயர மனமற்றவர்களாகவும் சட்டச் செயற்பாடுகளின் நிர்ப்பந்தத்தால் நாடுகடத்தப்படும்போது தாங்கொணாத் துன்பச்சுமையுடன் வெற்றுடம்புகளாகப் புலம்பெயர்வதையும் மண்ணின் மீது தீராக்காதல் கொண்டவர்கள் புலம்பெயராது பிறந்த மண்ணிலேயே மண்ணோடு மண்ணாகியதையும் பல கதைகள் நுணுக்கமாகப் பதிவுசெய்துள்ளன. அத்தோடு சட்டச் செயற்பாடுகளால் இந்தியப் பிரஜை அந்தஸ்தைப் பெற்று இந்தியாவில் வாழ்ந்தாலும் அவர்களது உள்ளுணர்வு இலங்கையின் மலையகப் பிராந்தியத்தையே தமக்குரிய தேசமாக வரித்துக்கொண்டதோடு அப்பிராந்தியத்துடன் ஆத்மார்த்த உறவினைப் பேணவும் தவியாய் தவித்தது. எடுத்துக்காட்டாக, அவர்களின் தேசம் என்ற கதையில் வரும் பின்வரும் சித்திரிப்பு புலம்பெயர்க்கப்பட்ட மலையகத் தொழிலாளர்களின் ஆழ்மன வெளிப்பாட்டினை உணர்த்துகின்றது,

> *“இதுதானே என் பூமி... இங்கே தானே என் வயதில் முக்கால்வாசி போயிற்று... என் உழைப்பும் இங்கேதான்... இந்த மலையில்தான் வாழ்ந்தேன்... இந்த வெய்யிலில் தான் காய்ந்தேன். இந்தக் காற்றைத்தானே சுவாசித்தேன்... இதுதானே என்பூமி-இதுதானே என் நாடு..” (மாத்தளை சோமு, 1995:39)*

மலையகத் தமிழரின் தவிப்புக்களையும் ஏக்கங்களையும் கருத்தில் கொள்ளாது அவர்களின் உணர்வுகளை வெறும் இயந்திரங்களாக மதிப்பிட்ட சிறீமா–சாஸ்திரி ஒப்பந்தம், பிறந்து வளர்ந்து வாழ்ந்து பழகிய மண்ணை விட்டுப் பிரிந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர்களை உள்ளாக்கியது. இந்தப் பிரிவால் மனிதமனம் படும் வேதனையை மு.சிவலிங்கம் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்:

> *“இனி ஒரு காலத்தில்.... இந்த மலையில் .... இப்படி வந்து உட்கார்ந்து ... இவ்வளவு அழகு கொட்டும் பூமியைப் பார்க்க*

முடியுமா...? அவன் கண்கள் தூரத்துப் பார்வையிலிருந்து அருகில் இருக்கும் மலைத் தொடர்கள் வரை நோட்டமிடுகின்றன... உயர்ந்த காடு.. ஏகாந்தமான சூழல்.. பறவைகள், வண்டுகள், பூச்சிகளின் குரலோசைகள்... காற்றினால் உரசித் தழுவிக்கொள்கின்ற மரங்களின் இன்ப முனகல்கள்.. குளிர் வாடையாய், தென்றலாய் அவனைத் தழுவுகின்ற பாசக் காற்று இன்னும் எத்தனை மாதங்களுக்கு உறவாடும்..? அவனுக்கு இலங்கை மண்ணை விட்டு இந்தியாவுக்குப் போகவே விருப்பமில்லை..'' (சிவலிங்கம், 2010:01)

சுக்குரு என்ற பாத்திரத்தின் இவ் ஏக்கமும் தவிப்பும் தான் பிறந்து வளர்ந்த சூழலில் அவனுக்கிருந்த ஈடுபாட்டையும் அதனுடனான நெருக்கத்தையும் காட்டுகிறது. இவ்வாறே அம்மாசியின் 'இந்த மலையூரிலே இருக்கிற நீர்வீழ்ச்சியையும் சலசலத்து ஜில் என ஓடும் நீரோடைகளையும், நான் நட்டு வளத்து பராமரித்த தேயிலைச் செடிகளையும், தேவதாரு மரங்களையும், என்ர கைபட்டு பசுமையான இந்த தோட்டத்து மண்ணையும் என்னாலை விட்டுப்புட்டு இந்தியப் பிரசையா போறது எப்படியுங்க. ஏலாதுங்க. விருப்பமில்லிங்க.' (உழைக்கப் பிறந்தவர்கள், 1997: 477) என்ற உணர்ச்சி வெளிப்பாடும் அமைகிறது.

சட்ட ஏற்பாடுகளால் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் தாம் பிறந்து வளர்ந்த மண்ணோடு இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்த உறவுகளையும் பிரிந்து செல்ல வேண்டியதாயிற்று. அவ்வகையில் நண்பர்களுக்கிடையிலான பிரிவினை, பிரிந்து செல்லும் ஒரு தோழன், ஒப்பாரிக்கோச்சி ஆகிய கதைகளிலும் காதலர்களுக்கிடையிலான பிரிவினை மதுர கீதமும், கணவன் மனைவிக்கிடையிலான பிரிவினை நடுக்கடலில் என்ற கதையிலும் பிள்ளைகளுக்கும் தந்தைக்கும் இடையிலான பிரிவினை அம்மாசி இலங்கைப் பிரஜையானான், ஜென்மபூமி ஆகிய கதைகளிலும் கண்டுகொள்ள முடிகின்றது.

''சுந்தரம்..! ஒரம் போட்டு முடிச்சதும் ரெண்டு பேரும் டவுனுக்குப் போய் ஒரு போட்டோ புடிச்சுக்குவோம்! இனிமே எந்த காலம் நீயும் நானும் இப்படி இருக்கப் போறம்..? என்று சுப்பிரமணி சொன்னான். அவனது கைகளை இறுகப் பிடித்துக் கொண்ட சுந்தரம்.. 'டேய்.. நீ போனப் பொறகு ஒன்னைய பாக்குறதுக்கு கட்டாயம் வருவேன்.

கவலப் படாத...! போட்டோ செலவு நான்தான் குடுப்பேன்..' என்றான்" (சிவலிங்கம், 2010:08)

இச்சித்திரிப்பில் இரு நண்பர்களுக்கிடையிலான சிநேகத்தையும் அவர்களுக்கிடையே இடம்பெறப் போகிற பிரிவின் வலியையும் இங்கு காணக்கூடியதாக உள்ளது.

"ஐயோ! போறீயலே இனி எங்கே காணப்போறம்? கடைசியா ஒங்களை எல்லாம் ஒருக்கா நல்லாப் பார்க்கனும் போல இருக்கு.." (மொழிவரதன், 1988:17) போன்ற உணர்ச்சிக் கொந்தளிப்புகள், பிரிந்து செல்பவர்களுக்கு இடையிலான நெருக்கத்தையும் பிரிவினது நீட்சியையும் உணர்த்துகின்றன. இவ்வாறு நண்பர்கள், உறவினர்கள், காதலர்கள், கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள் எனப் பலரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியும் நிலை நிலவியதை இக்கதைகளின் மூலம் கண்டுகொள்ளமுடிகின்றது.

புலம்பெயர் பயணமும் பயண ஏற்பாடுகளும்

புலம்பெயர்ந்து செல்பவர்களுக்கான பிரயாண ஏற்பாடுகள் உள்ளிட்ட வசதிகள் தோட்ட நிர்வாகத்தாலும் இரு நாட்டு அரசுகளாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால், அவையாவும் சுதந்திரமாகவும் சுகமாவும் சென்றடைவதற்கான வசதிகளாக அமையவில்லை என்பதை இக்கதைகள் பதிவுசெய்துள்ளன. அவற்றினைப் பின்வருமாறு நோக்கலாம்:

01. இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்குக் கடவுச்சீட்டு வழங்கப்பட்டது. அதனைப் பெற்றுக்கொள்ள நாட்டில் எங்கிருந்தாலும் கண்டி இந்தியத் தூதுவராலயத்திற்கு நேரடியாக வந்து விண்ணப்பிக்க வேண்டும்.

    உதாரணம் : '...போன வாரம் வந்தபோது படமும் பணமும் கொண்டு வரச் சொன்னீங்க. நானும் அதைத்தான் கொண்டாந்திருக்கேன். இப்ப தொரையோட துண்டும் கேட்கிறீங்க. முன்னாலேயே சொல்லியிருந்தா அதையும் வாங்கிட்டு வந்திருப்பேனுங்களே? ..... நான் பதுளையில் இருந்து வர்ரேனுங்க. இனி போய் வர்ரதுன்னா லேசுங்களா..? (கோவிந்தராஜ், 1996: 94)

02. புலம்பெயர்பவர்களுக்கு மண்டபம் கேம் வரையான பிரயாண டிக்கட்டுகளையும் ரயில் நிலையம் வரையான வாகன வசதியையும் தோட்ட நிர்வாகம் பொறுப்பேற்றிருந்தது.

உதாரணம் : *'பதுளையிலிருந்து இந்தியாவுக்குப் போகிறவர்களுக்கென்றே கூடுதலாக இணைக்கப்பட்டிருந்த இரண்டு ரயில் பெட்டிகளிலும் சீசன் காலத்து கொழுந்து மூட்டைகளை அடைப்பது போல அடைக்கப்பட்டு வந்த சனங்கள், பொல்காவலையில் மூச்சு விட்டு நின்றார்கள்.*

இரண்டு பெட்டிகளும் கொழும்பிலிருந்து தலைமன்னார் பியர் செல்லும் ரயிலுடன் இணைக்கப்படும்.

ஐம்பது பேர் போனாலும் இரண்டு பெட்டிகள் ஐந்நூறு பேர் போனாலும் இரண்டே பெட்டிகள் தான்' (மேலது: 103)

03. இலங்கையில் வசிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் முடிந்தும் புலம்பெயராதவர்களை அரசு கைது செய்து சிறையிலடைத்தது. தோட்ட நிர்வாகமும் அக்குடும்பத்திற்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளை துரிதப்படுத்தி, தலைமன்னார் இறங்குதுறைக்கு ரயிலேற்றியது. அரசு கைதிகளை தலைமன்னாருக்கு கொண்டு சென்று கப்பலேற்றியது.

உதாரணம் : *'குளிப்பதற்கு போய்க்கொண்டிருந்த இருவரில், சுப்பிரமணியத்தை ஆப்பீஸிலிருந்தபடி பெரிய கிளாக்கர் அடையாளங் காட்டினார். சிவில் உடையில் வந்திருந்த இரண்டு பொலிஸ்காரர்கள் ஓடிப்போய் சுப்பிரமணியைப் பிடித்துக் கொண்டார்கள். திருடனைப் பிடிப்பது போல் இழுத்துக்கொண்டு பொலிஸ் வண்டியில் ஏற்றிக்கொண்டு பறந்தார்கள். சுக்குரு தேயிலைக்கு உரம் போட்டவன். அந்த உரம் படிந்த கோலத்தோடு பொலிஸ் வண்டியில் ஏற்றப்பட்டான். (சிவலிங்கம், 2010: 09)*

04. புலம்பெயர்ந்து செல்பவர்கள் தாங்கள் கொண்டு செல்லும் பொருட்கள், நகைகள் மற்றும் பணம் உட்பட அனைத்தையும் தெளிவாக எழுதி, மத்திய வங்கியில் அனுமதி பெறவேண்டும்.

உதாரணம் : *'முதலாளி கொடுத்த ஐயாயிரம் ரூபாவில் நாலாயிரம் ரூபாவை பர்மிட்டில் போட்டு விட்டு மிகுதி ஆயிரத்தையும் போக்குவரத்துச் செலவுக்கென்று வைத்துக்கொண்டான். பர்மிட் பாசாகி வர எப்படியும் இரண்டு வாரங்களாவது ஆகும்.' (கோவிந்தராஜ், 1996: 100,101)*

05. இராமேஸ்வரம் சென்றதும் கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலேயே கப்பல் நிறுத்தப்பட்டு, அங்கிருந்து படகுகள் மூலமாக கரைக்கு அழைத்துச் செல்லல்.

உதாரணம் : *'வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும் ஏழெட்டுப் படகுகளில் ஒன்றன்பின் ஒன்றாக ஆட்களை கப்பலிலிருந்து இறக்கி ஏற்றிக் கொண்டு நிற்க, எஞ்சின் முன்னால் செல்ல ரயில் போலப் படகுகள் பின்னால் செல்லும்.' (மேலது: 107)*

06. இராமேஸ்வர மண்டபக் கேம்பிலிருந்து, புனர்வாழ்வு வழங்க திட்டமிட்டிருந்த இடங்களுக்கு லொறிகளில் ஏற்றிச் செல்லல்.

உதாரணம் : *'ஆரம்பத்தில் மண்டபம் கேம்பிலிருந்து நெய்வேலிங்கிற ஊருக்கு எங்களை ஒரு லொறியில் கொண்டுவந்தார்கள்.' (மேலது: 90)*

இவ்வகை ஏற்பாடுகள் தவிர கள்ளத்தனமாக இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் படகுகள் மூலம் சென்றதோடு இந்தியாவுக்குச் சென்றவர்களுள் சிலர் படகுகளில் இலங்கை திரும்பவும் முயற்சித்துள்ளனர். அதன்போது பலர் படகு விபத்துக்களில் உயிர்துறந்துமுள்ளனர்.

உதாரணம் : *'மன்னார் கரையிலே பதினொரு சடலங்கள்! வள்ளம் கவிழ்ந்ததால் நேர்ந்த விபத்து!! கள்ளக் குடியேற்றக்காரர்கள் மூவர் கைது!!! ஒருவரைக் காணவில்லையாம்! பொலிசார் புலன் விசாரணை நடத்துகின்றனர்.' (மலையகச் சிறுகதைகள், 1997: 71)*

மேற்கூறிய சித்திரிப்புக்களும் விவரணைகளும் பிரயாண ஏற்பாட்டின் அவலத்தையும் அதில் சிக்கித்தவித்த மலையகத் தமிழர்களின் துயரங்களையும் காட்டுகின்றன. இன்னும் மலையகப் பிராந்தியங்களில் இருந்து அம்மக்களை சுமந்து சென்ற ரயில் 'ஒப்பாரிக் கோச்சி, அழுகைக் கோச்சி' என்ற அடையாளத்தைப் பெற்றமை அவர்களது பிரிவுத் துயரின் கொடூர சின்னமாக விளங்குகிறது.

'தலைமன்னார் கோச்சி பதுளையில் காலை ஆறு மணிக்குப் புறப்படும். இந்தக் கோச்சிக்கு "ஒப்பாரிக் கோச்சி" என்ற பட்டப்பெயர் சூட்டியிருந்தார்கள்..! தலைமன்னார் கோச்சி, தலவாக்கொல்லை ஸ்டேஷனுக்கு வந்ததும், எல்லோரும் குய்யோ... முறையோ... என்று ஓலமிட்டுக் கதறினார்கள். மரண வீட்டு ஒப்பாரி வைத்து அழுதார்கள். கோச்சி வண்டிக்குள்

ஏறியவர்கள். கரங்களை நீட்டி கீழே நிற்பவர்களைப் பிடித்துக் கொண்டு அலறும் அந்த துயரக் காட்சி உயிரையும், ஆத்மாவையும் பிடுங்கியது... ஒப்பாரி சத்தத்தோடு கோச்சி புறப்பட்டது. கோச்சி ஓடத்தொடங்கியதும், பல இளைஞர்கள், தங்கள் உறவுகளைப் பிரிய முடியாமல், கைகளை அசைத்துக் கொண்டு, சிறிது தூரம் கோச்சியின் அருகிலேயே ஓடினார்கள்" (சிவலிங்கம், மு, 2010: 13)

இந்திய அரசின் புனர்வாழ்வுத் திட்டங்கள் : போதாமைகளும் போலித்தனங்களும்

இக்கதைகளினூடே இந்திய அரசின் புனர்வாழ்வுத் திட்டங்களின் போதைமைகளும் போலித்தனங்களும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளமையும் ஒரு முக்கிய அம்சமெனலாம். சிறீமா-சாஸ்திரி உடன்படிக்கையின்கீழ் இந்தியா செல்கின்றவர்களுக்கு இந்திய அரசு 1968ஆம் ஆண்டு புனர்வாழ்வுத் திட்டத்தைக் கொண்டுவந்தது. இத்திட்டத்தின்படி, உடன்படிக்கையின்கீழ் வருகின்ற அனைவருக்கும் புனர்வாழ்வு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவற்றைப் பெற்றுக்கொள்ள கண்டியில் திறக்கப்பட்டிருந்த புனர்வாழ்வு அலுவலகத்தில் பதிவு செய்து குடும்ப அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குடும்ப அட்டை அற்றவர்கள் புனர்வாழ்வு பெறுவதற்குத் தகுதியற்றவர்களாகக் கணிக்கப்பட்டனர். அத்தோடு புனர்வாழ்வுத் திட்டத்தில் சில வரையறைகளும் அமுல்படுத்தப்பட்டன. உதாரணமாக,

'உடன்படிக்கையின்கீழ் இந்தியா வருபவர்களுள் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை வைத்திருப்பவர்களுக்குப் புனர்வாழ்வு வசதிகள் வழங்கப்படுவதில்லை. இதனால் அவர்கள் மண்டபம் முகாமில் தங்கி நிற்க அனுமதிக்கப்படுவதில்லை. ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு முகாமில் தங்கி நிற்கும் காலத்தில் செலவுக்கான தொகை கொடுக்கப்படுவதில்லை. ஐயாயிரம் ரூபாய்க்கும் குறைவாக பணம் கொண்டவர்களுக்கு அரிசி ஒரு கிலோ 57 காசுக்கு கொடுக்கப்படுகின்றது' (எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள், 1984:56)

இந்திய அரசு அறிவித்திருந்த புனர்வாழ்வுத் திட்டங்கள் வருமாறு:

01. தேயிலை, றப்பர், சிங்கோனா தோட்டங்களிலும் அரசு பண்ணைகளிலும் வேலை வாய்ப்பு
02. நூற்பாலை, சர்க்கரை ஆலை, போக்குவரத்து கழகங்களில் வேலைவாய்ப்பு
03. நிலங்களில் குடியமர்த்துதல், விவசாயத்திற்கு நிலம் வழங்குதல்
04. நிலம் வாங்கவும் விவசாயம் செய்யவும் கடனுதவி
05. வியாபாரக்கடன் ஐயாயிரம் ரூபாவும் சுயவேலை வாய்ப்பும்
06. வீடு கட்டுவதற்கான பண உதவி: ஆறாயிரம் ரூபா நகர்புறத்திலும் கிராமங்களில் மூவாயிரம் ரூபாவும் (Nadesan, s, 1993: 231, Vamadevan, M, 1989: 118-142, எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள், 1984: 61)

இவ்வாறு பல திட்டங்களை அறிவித்திருந்தபோதும் நடைமுறையில் அவையாவும் இந்தியா புதுவாழ்வளிக்கும் என்ற நம்பிக்கையில் வந்த மலையகத் தமிழர்களுக்கு எவ்வித பயனையும் அளிக்கவில்லை என்பதை இக்கதைகள் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது. எடுத்துக்காட்டாக,

> *"என் இரு கண்களிலும் கிடைக்கப்பெற்ற சுக்குருவுக்கு தங்கவேலு எழுதும் கடதாசி. நாங்கள் இப்பவும் கடவுள் கிருபையால் ஷேமமாக இருக்கோம். தம்பி இந்தியாவுக்கு வர்ற ஆசையை வுட்டுப்புடு...! நாங்க ஏமாந்துட்டோம். குடும்ப கார்டு எல்லாம் பொய்யி. புனர்வாழ்வும் பொய்யி. இங்க இருக்கிறவனெல்லாம் மனுசங்களே கெடையாது. திருட்டு ஏமாத்து, பொய்தான் வாழ்க்க... வாக்குவாதம் செஞ்சா.. வெட்டு, கொத்து, கொல.. எல்லாருமே கொடூரமானவங்க...கையில் மடியில் கொண்டு வந்த பணமெல்லாம் மண்டவம் கேம்போடு முடிஞ்சி போச்சி... யாவாரக் கடன், விவசாயக் கடன், எல்லாம் வாங்கினாலும், எங்களால ஒன்னும் செய்ய முடியாது.' (சிவலிங்கம், 2010:06)*

என்ற தங்கவேலுவின் கடிதக் குறிப்புக்கள் இந்தியப் புனர்வாழ்வுத் திட்டத்தின் போலித்தனங்களையும் போதாமைகளையும் அப்பட்டமாக

வெளிப்படுத்துவதைக் காணலாம். இதனால் இந்தியாவுக்குப் புலம்பெயர்க்கப்பட்ட பெரும்பாலானவர்களின் வாழ்க்கைப் போராட்டமும் அவலமும் மிகுந்ததாகவே அமைந்தன. அவ்வகையில் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் அம்மக்கள் அனுபவித்த பல்வேறு துயரங்களையும் இச்சிறுகதைகளில் கண்டுகொள்ள முடிகின்றது. குறிப்பாக, அகதி வாழ்வு, வதிவிடப் பிரச்சினை, தொழிலற்ற நிலைமை, காலநிலை மாற்றம் தந்த சுமை, தமது பூர்வீக சொத்துப் பறிப்பு, இந்திய உறவினர்களுக்கிடையே விரிசல், தீண்டாமைக் கொடுமை, இந்திய அதிகாரிகளினது அலட்சியமும் அதிகார துஸ்பிரயோகமும், சிறை வாழ்வு எனப் பல்வேறு துன்பங்கள் அவர்களை விடாது அழுத்தின.

அந்நியப்படுத்தப்பட்ட வாழ்வு

இலங்கையில் வாழ்ந்த காலத்தில் இந்தியத் தமிழனாக அடையாளங் காணப்பட்டவர்கள் பின்னர் உடன்படிக்கைகளின்கீழ் இந்தியா சென்றதும் அங்கு சிலோன்காரனாகவும் கண்டிக்காரனாகவும் அடையாளங் காணப்பட்டனர். சட்டம் அவர்களுக்குப் பிரஜைகள் அந்தஸ்தை வழங்கினாலும் இரு நாட்டு சமூகத்தினரும் அவர்களை தள்ளிவைத்தே செயற்பட்டமை அவர்களுக்கு உளநிலையில் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்தது எனலாம். இதனை புன்னைவனராசனின் அவர்கள் அகதிகள் கதை சிறப்பாகக் காட்டுகின்றது. அக்கதையில் வரும் *''கண்டியிலே நான் இந்தியாக்காரன். இந்தியாவிலே நான் கண்டிக்காரன் அப்ப நான் எந்த நாட்டுக்காரன்டா..?''* (புன்னைவனராசன், 2006:53) என்ற சூசையின் கேள்வி அநாதைகளாக்கப்பட்ட மலையகத் தொழிலாளர்கள் அனைவரிடத்தும் எழுந்த அநாதரவான கேள்வியாகும்.

இந்தியாவில் பிறந்து, தமது பால்ய காலத்தை இந்தியாவிலேயே கழித்து, தொழிலுக்காக இலங்கை சென்று, அங்கு தமது ஜென்மபூமியான இந்தியாவை நெஞ்சில் சுமந்து பல ஆண்டுகள் வாழ்ந்து, ஒப்பந்தத்தின் மூலம் பெருங்கனவுகளோடு ஜென்மபூமியைத் தொட்டவர்களின் எதிர்பார்ப்புகளும் சிதைந்துபோனதை இச் சிறுகதைகளின் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது. எடுத்துக்காட்டாக, சி. பன்னீர்செல்வத்தின் ஜென்மபூமி என்ற கதையில் இந்தியாவை நெஞ்சில் சுமந்து 40 வருட காலம் இலங்கையில் வாழ்ந்து, தனது

மகனையும் பிரிந்து, தனது ஜென்மபூமிக்குத் திரும்பியவரை இந்தியச் சமூகமும் அரசும் அந்நியப்படுத்தி தள்ளிவைத்ததையும் சட்டப்படி பிரஜை அந்தஸ்தை வழங்கிய அரசே அம்மக்களை அகதிகளாகப் பதிவுசெய்யவில்லை எனக் கூறி, சிறைப்பிடித்த கோரத்தையும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 'நான் என் தாய்நாட்டுக்கு பொறந்த மண்ணுக்குத் திரும்பி வந்து இருபது வருசங்கள் கழிச்சு போச்சு. ஆனா இந்த தேசம் என்னை இப்பவும் அந்நியனா அகதியாத்தான் பாக்குது... பிறந்த மண்ணிலே அநாதையாகிப்போய் தெருவிலே கிடக்கின்றேன். இது ஏன் சார்? நான் யார்? தமிழனா, இந்தியனா? என் தேசம் எது? எதுவுமே இல்லேன்னா நான் யார்? சொல்லுங்க சார்' (பன்னீர்செல்வம், சி, 2011: 99-101) என்ற உணர்ச்சிக் கொதிப்புக்கள் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்த மலையகத் தமிழரின் அந்நியப்படுத்தப்பட்ட வாழ்வின் சாரத்தை வெளிப்படுத்துகின்றன. இந்தியாவில் பிறந்து, தனது பால்ய காலத்தை அங்கேயே கழித்த நபருக்கே இந்நிலை என்றால் கடலையும் கப்பலையுமே காணாது தேயிலைத் தோட்டங்களுக்குள்ளே முடங்கிக்கிடந்தவர்களின் புலம்பெயர் வாழ்வு எவ்வளது துயர் சுமந்திருக்கும் என்பது வெட்டவெளிச்சமாகும்.

காலநிலை மாற்றம் தந்த சுமை

இலங்கையின் மத்திய பிரதேசம் நல்ல நீர்வளமும் குளிர்மையான காலநிலையையும் கொண்ட ஈரவலயப் பிரதேசமாகும். ஆனால், இங்கிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள் தமிழ்நாட்டில் நீர்வளமற்ற வரண்ட பிரதேசங்களில் வாழ நேர்ந்தமையானது அவர்களது இயல்பான வாழ்வோட்டத்தைப் பெரிதும் பாதித்தது எனலாம். குறிப்பாக, வானம் கறுத்தா மழை பெய்யும் தண்ணிக்கு கஷ்டமே இல்லாத நாட்டிலிருந்து *'ஆந்திராவில் - சென்னையில் - சிலோனில் புயல் அடிக்க வேண்டும் மழை பெய்ய..'* என்ற நிலைமைகொண்ட தமிழ்நாட்டு வாழ்வானது அம்மக்களைப் பெரிதும் பாதித்தது. இதனை அவர்களின் தேசம் என்ற கதையில் வரும் கண்ணுசாமி என்ற பாத்திரத்தின் மூலம் நன்கு உணர்ந்துகொள்ள முடிகிறது. கண்ணுசாமி மலையகத்தை எண்ணி எண்ணி ஏக்கங்கொள்வதும் தண்ணீருக்காகத் தவம் கிடப்பதும் மழை பெய்யும்போது தன்னை அறியாமல் ஆடிக்களிப்பதும் ஈற்றில் மழையில் நனைந்தவாறே உயிர்துறப்பதும் காலநிலை வேறுபாட்டால் இயல்பு வாழ்க்கை எவ்வாறு பாதிப்படைந்தது என்பதைச் சிறப்பாகக் காட்டுகிறது. அத்தோடு இக்கதையில் வரும் கறுப்பனின் "படுத்து எந்திரிச்சா

ஆடுமாடோட மாரடிக்கனும்... கெணத்தோட லோல்படனும்... வானத்தோட சண்டை போடனும்... இதுபோதாதுன்னு மனுசங்களோட சண்ட போட வேண்டியிருக்கு... தொட்டுக்கக் கூடாத சாதியாம்... என்ன பொழைப்பு?..." (மாத்தளை சோமு, 1995:42) என்ற கூற்றானது நீர்த் தட்டுப்பாட்டின் அவலத்தை விபரிப்பதோடு அங்கு நிலவிய சாதியத்தின் கொடுமையையும் உணர்த்துகிறது.

சமூகப் படிநிலையமைப்பும் பாரபட்சமும்

மலையக சமூக அமைப்பில் சாதியம், தீண்டாமையின் தாக்கம் இந்தியச் சமூகக் கட்டமைவைவிட மிகக் குறைந்தளவிலேயே செல்வாக்குச் செலுத்துகின்றது. மலையகத்திலிருந்து புலம்பெயர்ந்து இந்தியா சென்றவர்களுக்கு இந்திய சமூகப் படிநிலையமைப்பு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தின. அவர்களின் தேசம் கதையில் வரும் "தோட்டத்தில் எல்லாரும் தான் இருப்போம். இங்க மாதிரி சாதிக்கு ஒரு ரோடு - இந்த தெருவுல இந்த சாதி தான் இருக்கணும்கிறது இல்ல. நான் இருந்த லயத்தில ஒரு பக்கம் செட்டியார் - இன்னொரு பக்கம் கவுண்டரு – கடைசியா புள்ளமாருக. இப்படி எல்லோரும் இருந்தாங்க... யாரும் இங்க மாதிரி சாதிய பத்தி பேசுரது இல்ல" (மாத்தளை சோமு, 1995:44) என்ற கறுப்பனின் கூற்று மலையகத்தில் சாதியத்தின் தளர்ந்த நிலையையும் தமிழ்நாட்டில் அதன் கொடுமையையும் வெளிப்படுத்துகிறது.

இந்திய உறவுகளின் விரிசலும் வாழ்வாதாரப் பிரச்சினைகளும்

புலம்பெயர்ந்து சென்றவர்களில் பெரும்பாலானோர் தம்மோடு கொண்டு சென்றதெல்லாம் 'கொஞ்சம் தேயிலைத் தூள், கொஞ்சம் கிராம்பு, சில சந்தன சோப்புக்கள், சில நூறு ரூபாய், நிறைய முதுமை' (புன்னைவனராசன், 2006:55) என்பவையே. இதனால் அங்கு சென்றவர்களின் வாழ்வாதாரமானது மிகவும் துன்பகரமானதாகவே அமைந்தன. நல்ல தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தமது பூர்வீக சொத்துக்களில் பங்கினைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்திய உறவினர்கள் அவர்களை வெறுக்கத் தொடங்கினர்; திரும்பி வந்தமைக்காக வருந்தத் தொடங்கினர். 'கண்டிகார பயலுக வந்திட்டானுங்க பங்கு பிரிக்க...! சிங்களவனுங்க அடிச்சி கொல்லலியே...!' (மாத்தளை சோமு, 1995:43) என்ற நிலையே

காணப்பட்டது. நம்பிப்போன பல உறவுகள் வெகு விரைவிலே அவர்களை நிராகரித்தன. எடுத்துக்காட்டு:

'சித்தப்பாவை நம்பி கிராமத்திற்குப் போன இந்துமதி, இரண்டு மாதங்களிலேயே பாட்டியை இழந்துவிட்டாள். பணம் முடிந்ததும் சித்தியின் பாசம் கரைந்து போனது.' (பன்னீர்செல்வம், 2011:68)

இதனால் பலருக்கு இந்திய அரசு வழங்கும் சலுகைகளை நம்பியே தமது வாழ்வினைக் கடத்த வேண்டியதாயிற்று. ஆனால், அதிகாரிகளோ சட்டப்படி அகதிகளுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைக்கூட கொடுக்காது அவர்களை அலைக்கழித்தனர். இதனை புன்னைவனராசனின் "அவர்கள் அகதிகள்" என்ற கதை பதிவுசெய்துள்ளது. அத்தோடு அவரது மற்றொரு கதையான "இக்கரை நியாயம்", இலங்கைப் பிரஜை அந்தஸ்தை இழந்து இந்தியாவிற்குள் தன் தந்தையுடன் நுழைந்த கதிர்காமநாதன் என்ற இளைஞன் சந்தேகத்தின் பெயரில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டதைக் காட்டுகிறது. இவ்வாறு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற மலையகத் தமிழர்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களைப் பல சிறுகதைகள் தத்ரூபமாகப் பதிவு செய்துள்ளன.

தொழிலற்ற நிலைமை

இலங்கையின் பிரஜை அந்தஸ்தை இழந்த இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுக்கு நாட்டில் அரச தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவோ சுயமாக தொழிலினை மேற்கொள்ள நிலத்தையோ வேறு எந்த உடைமைகளையோ சட்டபூர்வமாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை தோன்றியது. அத்தோடு பின்னர் வழங்கப்பட்ட பதிவுப் பிரஜை என்ற அந்தஸ்தும் அவர்களுக்குத் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள பாரிய தடைகளையே ஏற்படுத்தின. அக்காலத்தில் கல்வியறிவில் கீழ் மட்டத்திலும் பாதுகாப்பற்ற இருப்பிடத்திலும் வாழ்ந்த மலையகச் சமூகத்தினர் தமக்குப் பதிவு ஆவணமாகத் தரப்பட்ட ஏட்டுப் பிரதியைத் தொடர்ந்து பேணிப் பாதுகாப்பதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இதற்குச் சிறந்த உதாரணமாக பேரினவாதிகளால் மலையகத் தோட்டப்புறங்களில் மேற்கொள்ளப்பட்ட வன் செயல்களின் போது அம்மக்களின் பதிவு ஆவணங்கள் எரிக்கப்படும் அவலமும் நிகழ்ந்தமையைக் கூறலாம். எடுத்துக்காட்டாக,

"'பேர்த் சர்டிபிக்கெட் இருக்கா..?' அதிகாரி கேட்டார். ஒரு எழவும் கெடையாது..! எல்லாம் என்ன ஆனது...? 'ஒங்க ஆளுங்க எரிச்சுப்புட்டாங்க!'... 1958ல்ல சிறீ கொழப்பம் செஞ்சாங்க... வன்செயல் நடத்தினாங்க... எங்க குடும்பங்கள ஆமிகாரன்களும் கிராமத்துக் காடையன்களும் வெட்டி, கொத்தி, சுட்டு பொசுக்கினாங்க... அந்த சொடலையோடதான் எங்க காயிதம் எல்லாம் எரிஞ்சி போச்சி!'" (சிவலிங்கம், 2005:123)

எனும் கணபதி என்ற பாத்திரத்தின் நெஞ்சுக்குள் கனக்கும் துன்ப சரித்திரத்தின் உணர்ச்சி வெளிப்பாடு, அக்கொடுமைத் துயரினை வெளிப்படுத்துகிறது. அத்தோடு அறியாமையில் மூழ்க்கிக் கிடந்த மலையகச் சமூகத்தினருக்கு தமக்குப் பதிவு ஆவணமாகத் தரப்பட்ட ஏட்டுப்பிரதியை பாதுகாப்பதென்பது பெரும் சுமையாகியது. குறிப்பாக, மு. சிவலிங்கத்தின் பேப்பர் பிரஜைகள் என்ற கதையானது பத்திரத்தில் பிரஜை அந்தஸ்தை வழங்கியதால் அதனைப் பாதுகாக்க முடியாமல் போன ஒரு குடும்பத்தின் அவலத்தைப் பேசுகிறது. சுப்பையா என்ற தொழிலாளியின் மகன் தனக்கு துறைமுகத்தில் கிடைத்த வேலையை பெற்றுக்கொள்ள பல கனவுகளோடு சென்று, அங்கு தனது பதிவினை உறுதிப்படுத்தும் பிரதி எலி கடித்துச் சிதைந்திருந்ததால் வேலை கிடைக்காது திரும்பும் சோகத்தைக் குத்தல் கலந்த கேலியுடன் அக்கதை வெளிப்படுத்துகிறது. பதிவுப் பிரஜை அந்தஸ்தின் அவலத்தை அவ்விளைஞன் மூலம் பின்வருமாறு எள்ளி நகையாடுகிறார் ஆசிரியர்,

"ஏன் நான் மாத்திரம் இந்நாட்டின் ஏனையப் பிரஜைகளைப் போல இல்லை...? எனக்கு மாத்திரம் ஏன் பத்திரத்தை வழங்கி பிரஜையாக்கியுள்ளார்கள்? எனக்கு மாத்திரம் ஏன் பேப்பரை கொடுத்துள்ளார்கள்? நான் ஒரு பேப்பர் பிரஜை...! பதிவு பிரஜை...! இந்த பிரபஞ்சத்திலே "கடதாசி பிரஜைகள்" "பதிவு பிரஜைகள்" என்று மகுடம் சூட்டப்பட்டு அவமானப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்தான் என் பரம்பரை...! என் பத்திரத்தை எலி கடித்துவிட்டது..

நான் ஒரு எலி கடித்த பிரஜை! என் பிரஜாவுரிமை பத்திரம் நனைந்து விட்டால்... நான் இந்த நாட்டின் நனைந்த பிரஜை... என் பத்திரம் கிழிந்து விட்டால் ... நான் ஒரு கிழிந்த பிரஜை... என் பத்திரம் எரிந்து விட்டால்... நான் ஒரு எரிந்த பிரஜை...'' (சிவலிங்கம், 1992:12,13)

இவ்வாறு அரச தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியாத அவலநிலை தொடர்ந்ததோடு தமக்கென்று நிலமொன்றைக்கூட வாங்கமுடியாது குத்தகைக்கே நிலம் வாங்கி விவசாயம் செய்ய வேண்டிய துயரநிலை ஏற்பட்டதை குத்தகை என்ற கதை உணர்த்துகிறது. இவ்வாறு தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையினையும் சுயதொழிலில் ஈடுபடமுடியாத சூழலையும் மலையக மக்களிடத்து இச்சட்டம் திணித்தமையானது அவர்களது முழு வாழ்வாதாரத்தையும் பாதிப்பதாகவும் அச்சமுதாய வளர்ச்சினை மட்டுப்படுத்துவதாகவும் அமைந்தன.

அதிகாரிகளின் அலட்சியமும் அதிகார துஸ்பிரயோகமும்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கூலிகளாகத் தமிழர்கள் அழைத்துவரப்பட்ட காலத்திலிருந்து அம்மக்களை அதிகாரிகள் அலட்சியமாக நடத்தியதோடு அவர்கள் இங்கிருந்து இந்தியா சென்ற பின்னர் இந்திய அதிகாரிகளும் அவர்களை அலட்சியமாகவே நடத்தியதை பல கதைகள் பதிவு செய்துள்ளன. குறிப்பாக, இலங்கையில் வாழ்ந்த ஆரம்ப காலங்களில் மலையகத் தமிழர்கள் வெறும் கூலிகளாகவே இருந்ததால் அவர்களது கல்வியறிவு மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இதனால் அவர்களை நிர்வகிக்கும் அதிகாரங்களை பிரித்தானியர்கள் யாழ்ப்பாணத் தமிழரிடம் ஒப்படைத்திருந்தனர். ஆனால், அவர்களுள் பலர் மிகக் கடுமையாகவே இவர்களிடத்தில் நடந்துகொண்டனர் என்பதை காளிமுத்துவின் பிரஜாவுரிமை என்ற கதையில் காணமுடிகிறது:

''ஐயா எனக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கு. கருப்பையா என்று பெயர் வைச்சிருக்கோம்: எழுதிக் கொள்ளுங்கோ, எஜமான்' என்று தோட்ட சூப்ரண்டன் கந்தோரில் போய் ஆசையோடு சொல்லும் போதே, அங்கிருக்கும் யாழ்ப்பாணத்து கிளார்க்துரை 'என்னடா அது கருப்பு ஐயா? எப்போடா ஐயாவானே?'

சின்னக்காளிமுத்து என்று சொல்லடா' என்று அதட்டி 'சி.கா.' மட்டும் போட்டு விஷயத்தை முடித்துவிடுவான்" (உழைக்கப்பிறந்தவர்கள், 1997:371) என்ற சித்திரிப்பு அவர்களது அலட்சியத்திற்கும் அதிகாரத் துஸ்பிரயோகத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறே அவர்களது பிரஜா உரிமைக்கான விசாரணைகளை நடத்தியவர்கள் அம்மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது விண்ணப்பங்களை நிராகரிப்பதற்காகவே விசாரணைகளை மேற்கொண்டதோடு கச்சேரியில் உள்ள சாதாரண ஊழியன் முதல் அனைத்து அதிகாரிகளுக்கும் லஞ்சம் கொடுத்தால் தான் ஒவ்வொரு செயற்பாடும் முன் நகரும் என்ற நிலையும் காணப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

'எங்கட ஐயா, அவை உன்னைப் போல ஆள்கிட்டதான் ஆயிரம், மற்ற இடங்களிலெல்லாம் அஞ்சாயிரம் குறையாது. அப்படித்தானே பிரஜா உரிமை வேண்டினம்..... ஏனப்பா நிக்கறே? நேரமல்ல போகுது. ஓடிப்போய் எண்ணூறாவது பார்த்துவா. நான் ஐயாகிட்டச் சொல்றேன்' (குணராசா, 2010:265)

இலங்கையில்தான் இந்நிலை என்றால் இந்தியா சென்றவர்களின் நிலைமையும் இவ்வாறே தொடர்ந்தது. அவர்கள் அகதிகள் கதையில் வரும் சூசை அகதிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளைப் பெற்றுக்கொள்ள கூட ஆறு மாத காலமாக அலைந்தும் அச்சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் தவிப்பதைக் காணலாம்.

தொழிற்சங்கங்களினதும் அரசியல் தலைமைத்துவங்களினதும் பொறுப்பற்ற தன்மை

மலையகத் தமிழரில் பெருந்தொகையினர் நாடற்று அகதியானதற்கும், பிறந்து வளர்ந்த மண்ணையும் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்த உறவுகளையும் பிரிந்ததற்கும், தொழிலற்று நிர்க்கதியானதற்கும் வாழவழியற்று மடிந்துபோனதற்கும் இற்றைவரை வளமான வாழ்விழந்து துன்பசாகரத்திற்குள் மூழ்கிக்கிடப்பதற்கும் அவர்களது அரசியல் தலைமைத்துவங்களினதும் தொழிற்சங்கங்களினதும் பொறுப்பற்றத் தன்மையும் அலட்சியமுமே காரணம் என்று கூறுவாரும் உளர்.

குறிப்பாக, "வழி காட்டத் தவறிய தலைமைகளினால் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு இன்னும் தேடிக்கொண்டிப்பவர்களில் அவனும் ஒரு திசை தெரியாதவன்" (சிவலிங்கம், 2010:02) என்ற கூற்றும் "இந்தியத் தமிழரின் குடியுரிமையைப் பறித்த அரசியல்வாதிகள், மீண்டும் இலங்கை பிரஜையாவதற்கு விருப்பமானவர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் விண்ணப்பம் செய்யலாம் என்று சட்டமும் போட்டார்கள். தொழிலாளர்களின் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள், ஒழுங்காக... தெளிவாக... வழி காட்டவில்லை. 'விண்ணப்பம் செய்ய வேண்டாம். போராடுவோம்..' என்றார்கள். நடு வழியில் கையை விரித்து விட்டார்கள்..! கடைசி நேரத்தில் 'அப்ளிகேசன் போடுங்கோ...!' என்று அபயக் குரல் எழுப்பினார்கள்" (மேலது: 04) என்ற சித்திரிப்பும் மலையகத் தமிழரின் இவ் அவல நிலைமைக்கு அவர்களது தலைமைத்துவங்களின் பொறுப்பற்ற தன்மையும் முக்கிய காரணமெனச் சாடுவதைக் காணலாம்.

முடிவுரை

மேற்கூறிய கதைகளில் விரியும் காட்சிகள் யாவும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுக்கு மிகவும் நெருக்கமானவையாகும். அக்குழுமத்தின் முன்னோர்கள் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் எதிர்கொண்ட அனுபவங்களே அவற்றின் கருக்களாக அமைந்துள்ளன. வாசக மனத்திற்குள் பல முனைகளிலும் நெருடல்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ள இக்கருக்களும் அவற்றின் எடுத்துரைப்பு முறைகளும் நாடிழந்த வாழ்க்கையின் ஊசலாட்டத்தையும் மனத்துயரங்களையும் உணர்வுத் தளத்தில் நின்று யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளன. ஆனால், பிரஜாவுரிமை பறிப்பு, அதன் உடன்விளைவான நிகழ்வுகளால் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட அக, புறப் போராட்டங்கள், புலம்பெயர்க்கப்பட்ட நடைமுறைகள், புலம்பெயர் மனத்தடை, முதற்கட்டப் புலம்பெயர் வாழ்வின் சில அம்சங்கள், இந்திய அரசினது புனர்வாழ்வுத் திட்டங்களின் போதாமைகள்-போலித்தனங்கள் போன்றவை அவற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ள அளவுக்கு புலம்பெயர்ந்தவர்களின் வாழ்வியல் முற்றிலும் பதிவுசெய்யப்பட்டில்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, புலம்பெயர்ந்த மலையகத் தமிழர்களது இற்றைவரையான வாழ்வு, வாழ்தலுக்கான அவர்களது போராட்டம், அவர்களுக்கெதிராக தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்ற வன்முறைகள், அதீத சுரண்டல்கள், அவர்களது எழுச்சி, புலம்பெயர்

பெண்களின் வாழ்வியல் போன்றவை இன்னும் முழுமையாகப் பேசப்படாத நிலையே தொடர்வதோடு மலையகத் தமிழரின் புலம்பெயர் வாழ்வின் சாரத்தைத் திரட்டி, இலக்கிய உலகில் பெரும் அதிர்வினை ஏற்படுத்தும் படைப்புக்கள் எவையும் இன்னும் வெளிவரவுமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் புலம்பெயர்ந்த மலையகத் தமிழர்களிடத்திலிருந்து மிகமிக அரிதான படைப்பாளிகளே மேற்கிளம்பியுள்ளதோடு எண்ணிக்கையில் மிகக் குறைவான படைப்புக்களே வெளிவந்துமுள்ளன. அவ்வகையில் மலையகத் தமிழ்ச் சமூக வரலாற்றுப் பின்புலத்திலும், மலையகத் தமிழ் இலக்கிய வெளியிலும் அப்படைப்புக்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் உளதாகின்றது.

ஆய்வுக்குட்படுத்திய கதைகளில் விரியும் மலையகத் தமிழரின் வாழ்வானது அவர்களது வரலாற்று எழுதுகைக்கான தகவல் களஞ்சியமாகவும் விளங்குகின்றன. அதாவது அக்கதைகளின் ஒவ்வொரு இழையும் வரலாற்றுத் தகவலுடன் இறுக்கமாகப் பிணைந்து புனையப்பட்டுள்ளது. அதேவேளை கதைகளில் உலவும் பாத்திரங்களும் வெறுமனே கற்பனைத் தளத்தில் உருவாக்கப்பட்டவையாக அல்லாமல் பேரினவாதத்தினதும் அதிகாரவர்க்கத்தினரதும் கோரப்பிடியில் சிக்கிய வரலாற்று அபலைகளாகவே விளங்குகின்றன.

கதைகளில் மேலோங்கியுள்ள இவ்வரலாற்று உணர்வானது சில கதைகளின் கதையோட்டத்தை முறித்துள்ளதோடு சிறுகதையின் வடிவத்தையும் சிதைத்துள்ளன. குறிப்பாக, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தியெட்டு, மதுரகீதம், பிரிந்து செல்லும் ஒரு தோழன், கௌரவமான அடிமைகள் போன்ற கதைகளின் உரைநடையானது பாத்திரங்களின் மனவோட்டத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாக அமையாது செயற்கைத் தன்மைவாய்ந்ததாக அமைந்துள்ளதோடு பாத்திரங்களின் வளர்ச்சியையும் குன்றச் செய்துள்ளன. மேலும், பிரஜாவுரிமைச் சட்டம் மற்றும் அதன் உடன்விளைவான நிகழ்வுகள் குறித்து ஆசிரியர்கள் தம் கூற்றாக விபரித்துச் செல்பவை எல்லாம் வெற்றுக் கோசங்களாகி கதையோட்டத்தைப் பெரிதும் பாதித்துள்ளன. இதற்குச் சிறந்த உதாரணமாக ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தியெட்டு, மதுரகீதம் ஆகிய கதைகளைக் கூறலாம்.

இவ்வாறு கலையியல் நேர்த்தியில் சிற்சில குறைபாடுகளை இக்கதைகள் கொண்டுள்ள போதும் பிரஜாவுரிமை பறிப்பு மற்றும் அதன்

உடன்விளைவான செயற்பாடுகள் பன்முகப்பட்ட அகவெளிகளைக் கொண்டுள்ள தனிமனிதர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய அவலங்களையும் அதிர்வுகளையும் பதிவு செய்வதன் மூலம் ஒட்டுமொத்த இந்திய வம்சாவளி மலையகத் தமிழரினதும் அக மற்றும் புற வெளியில் நிகழ்ந்த அவலங்களையும் அதிர்வுகளையும் பதிவு செய்வதில் குறிப்பிடத்தக்களவு முழுமை பெற்றனவாகவே அவை விளங்குகின்றன.

எனவே, காலனித்துவ காலத்தில் தொழிலுக்காக ஆள்கட்டிகளால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, வரும்போதே கடலுக்கும் நிலத்திற்கும் பலரைப் பலி கொடுத்து, நடை பயணமாகவே மலைநாட்டை வந்தடைந்தவர்கள், காலனித்துவ அதிகாரிகளாலும் தோட்ட நிர்வாகத்தினராலும் பல்வேறு அடக்குமுறைகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் உட்பட்டதோடு சுதேசிய அரசியல்வாதிகளாலும், சிங்களப் பேரினவாதிகளாலும் வன்முறைகளுக்கும் ஓரங்கட்டலுக்கும் உட்படுத்தப்பட்டு, சக தமிழர்களாலும் தொழிற்சங்க அரசியல்களாலும் வஞ்சிக்கப்பட்டு, பிறந்து, வளர்ந்து வளப்படுத்திய மண்ணிலிருந்து பிடுங்கி எறியப்பட்டனர். பெருந்துயரச் சுமையுடன் திசைதெரியாதிருந்தவர்கள் புதுவாழ்வைத் தேடித் தம் மூதாதையரின் நிலம் நோக்கிப் புலம்பெயர்ந்தனர் - புது வாழ்வுண்டென்று புலம்பெயர்க்கப்பட்டனர். இந்திய அரசின் உள்ளீர்ப்பும் புனர்வாழ்வுத் திட்டங்களும், இலங்கையில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளும் அவர்களை இந்தியாவிற்குத் துரத்தின. ஆனால், புலம்பெயர்ந்தவர்களின் வாழ்நிலையானது தமது முன்னோர்கள் இலங்கைக்குப் புலம்பெயர்ந்தபோது அனுபவித்த துயரிலும் பார்க்கக் கொடுமை மிகுந்ததாகவே அமைந்திருந்ததை இக்கதைகள் மூலம் உணர்ந்துகொள்ள முடிகின்றது. புலம்பெயர் வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் அவலமும் துயரமும் அப்பிக்கிடந்ததை இக்கதைகள் நுணுக்கமாகப் பதிவுசெய்துள்ளன. இதனால் மலையகத் தமிழர் என்ற சமூகக் குழுமத்தின் புலம்பெயர் வாழ்வு நெடுக, துயரம் என்ற சக பயணியே நெருக்கமாக அருகமர்ந்து பயணித்திருக்கிறான் - பயணிக்கிறான் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

உசாத்துணை

அருணாசலம், க. (1994) **மலையகத் தமிழ் இலக்கியம்,** தமிழ் மன்ற வெளியீடு

அருணாசலம், க. (1999) **மலையகத் தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம்,** கொழும்பு; குமரன் புத்தக இல்லம்.

ஆப்டீன், ப, (1990) **இரவின் ராகங்கள்,** ('புதுப்பட்டி கிராமத்திற்கு கடைசி டிக்கட்') சென்னை; நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்.

உழைக்கப் பிறந்தவர்கள், (1997) (அ.செ.முருகானந்தன் - 'காளிமுத்துவின் பிரஜாவுரிமை', கே.ஆர். டேவிட் - 'கௌரவமான அடிமைகள்', பா.ரத்நஸபாபதி அய்யர் - 'அம்மாசி இலங்கைப் பிரஜையானான்') துரைவி வெளியீடு.

எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள், (1984) சிராக் வெளியீடு.

கந்தையா, மு.சி (2010) **நிசங்களின் சத்தம்,** சென்னை.

குணராசா, க. (தொ.ஆ) (2010) **முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்,** (செந்தூரன் - "உரிமை எங்கே?") பூபாலசிங்கம் பதிப்பகம்.

கோவிந்தராஜ், கே. (1996) **பசியாவரம்,** ('கந்தசாமி ஊருக்குப் போகிறான்', 'குத்தகை', 'கப்பல் எப்பங்க') குறிஞ்சி வெளியீடு.

சந்திரசோகரன், எஸ்., (1989) **இலங்கை இந்தியர் வரலாறு**, வைரவன் பதிப்பகம்,

சாந்திகுமார். எல், (1980) **"மலையகம்-சில குறிப்புக்கள்"**, தீர்த்தக்கரை – ஜூன் - ஆகஸ்ட்.

சாரல்நாடன், (1990) **மலையகத் தமிழர்,** சென்னை; மலையரசி பதிப்பகம்.

சாரல்நாடன், (1993) **மலையக வாய்மொழி இலக்கியம்,** தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்.

சாரல்நாடன், (2014) **மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள்,** கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.

சிவசுப்பிரமணியன், ஆ, (2006) "சமூக வரலாற்றுப் பின்புலத்தில் புதுமைப்பித்தனின் துன்பக்கேணி", **பஞ்சமனா பஞ்சயனா**, சென்னை; பரிசல்.

சிவானந்தன், அரு (1985) **வண்ணச்சிறகு**, சென்னை.

சிவலிங்கம், மு. (1992) **மலைகளின் மக்கள்,** ('பேப்பர் பிரஜைகள்', 'மதுர கீதம்') இளவழகன் பதிப்பகம்.

சிவலிங்கம், மு (2005) **ஒரு விதை நெல்,** ('ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டு...') மணிமேகலைப் பிரசுரம்.

சிவலிங்கம், மு (2010) **ஒப்பாரிக்கோச்சி,** ('ஒப்பாரிக்கோச்சி') நாவல் நகர் தமிழ்ச்சங்க வெளியீடு.

சோமு, மாத்தளை, (1995) **அவர்களின் தேசம்,** ('அவர்களின் தேசம்') குறிஞ்சி வெளியீடு.

ஞானசேகரன், தி, (2005) **தி. ஞானசேகரன் சிறுகதைகள்,** (பிறந்த மண்) ஞானம் பதிப்பகம்.

பன்னீர்செல்வம், சி, (2011) **ஜென்மபூமி,** ('ஜென்மபூமி', 'தமிழகம் நோக்கி') சென்னை; புத்தகம் வெளியிடுவோர்.

பன்னீர்செல்வம், சி, (2011) **அகதிகள் தெரு,** ('நங்கூரம்', 'சுட்ட மண்ணும் சுடாத மண்ணும்', 'காணாமல் போன நதிகள்') சென்னை; புத்தகம் வெளியிடுவோர்.

பன்னீர்செல்வம், சி, (2006) **ஒரு சாலையின் சரிதம்,** மதுரை; மக்கள் கண்காணிப்பகம்.

பன்னீர்செல்வம், சி, (2010) **திறந்தே கிடக்கும் வீடு**, மதுரை; மக்கள் கண்காணிப்பகம்.

புன்னைவனராசன், சுப., (2006) **போராளி,** ('அவர்கள் அகதிகள்', 'இக்கரை நியாயம்') சந்தியா பதிப்பகம்.

நு.'.மான், எம்.ஏ. (மொ.பெ) (2008) **பலஸ்தீனக் கவிதைகள்,** அடையாளம்.

நு.'.மான், எம்.ஏ. (2014) **"இனத்துவ முரண்பாடும் இலக்கிய வெளிப்பாடும் பின்காலனித்துவ இலங்கையில் தமிழ்க் கவிதை பற்றிச் சில அவதானங்கள்"**, மணற்கேணி நவ-டிச.

மலையகச் சிறுகதைகள், (1997) (இரா.சிவலிங்கம் - 'முன்னவன் சொத்து', செந்தூரன் -'நடுக்கடலில்',) துரைவி வெளியீடு.

முரளிதரன், சு, (2001) **தீவகத்து ஊமைகள்**, மலையக வெளியீட்டகம்.

மேமன்கவி, (2014) **"ஈழத்துப் புலம்பெயர்வு இலக்கியம் மலையக இலக்கியத்தை முன்வைத்து"**, ஞானம், ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழ்.

மொழிவரதன், (1988) **மேகமலைகளின் ராகங்கள்,** ('பிரிந்து செல்லும் ஒரு தோழன்') மலையக வெளியீட்டகம்.

மோகன்ராஜ், க. (1984) **"இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்",** ஈழம் ஆய்வு நிறுவனம்.

தம்பையா, இ, (1995) **மலையக மக்கள் என்போர் யார்?**, சென்னை; புதிய பூமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்.

வேலுப்பிள்ளை. ஸி.வி, (1987) **நாடற்றவர் கதை**, ஐலண்ட் அறக்கட்டளை வெளியீடு.

வேலுப்பிள்ளை. ஸி.வி, (1976) **மலைநாட்டு மக்கள் பாடல்கள்**, கொழும்பு, மாவலிப் பிரசுரம்.

வேலுப்பிள்ளை. ஸி.வி, (2007) **தேயிலைத் தோட்டத்திலே,** பாக்கியா பதிப்பகம்.

ஜயவர்தன குமாரி, (2011) **இலங்கையின் இன வர்க்க முரண்பாடு,** கொழும்பு; குமரன் புத்தக இல்லம்

ஜெயசீலன், எம்.எம், (2014) **மலையகத் தமிழரின் பிரஜாவுரிமைப் பிரச்சினையும் சிறுகதையாக்கமும்**, சர்வதேச ஆய்வு மகாநாடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஜெயபாலன், வ.ஐ.ச, (1989) **துருவச்சுவடுகள்,** நோர்வே;

ஜோசப் தெளிவத்தை, (2000) **மலையகச் சிறுகதை வரலாறு**, கொழும்பு, துரைவி.

Kondapi, C, (1951) **Indian Overseas 1938-1949**, Madras; Indian Council of World Aaffairs.

Nadesan, S, (1993) **A History of the Upcountry Tamil People**, A Nandalala Publication.

Sahadevan, P, (1995) **India and Overseas Indians: The case of Sri Lanka**, Delhi; Kalinga publications.

Vamadevan, M, (1989) **Sri Lankan Repatriates in Tamil Nadu**, Madras Zen publishers.

அமரர் இர. சிவலிங்கம்
ஞாபகார்த்தக் குழு

பெயர்	முகவரி	தொலைபேசி
திரு.எம். வாமதேவன்	BQ 2/2, மனிங் டவுன், வீடமைப்புத் திட்டம், மங்களா வீதி, கொழுப்பு 08	2693098
பேராசிரியர் தை. தனராஜ்	7, அலெக்ஸாண்ரா டெரஸ் கொழும்பு 06.	2583151
திரு.எச்.எச். விக்கிரமசிங்க	39/21 அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.	2435652
திரு.இ. ஈஸ்வரலிங்கம்	45/15A பிரெட்சிக்கா வீதி கொழும்பு 06.	2581201
கலாநிதி. பி. இராமனுஜம்	விகார மாவத்தை, கொலன்னாவை.	2572436
திரு.பி. இராதாகிருஷ்ணன்	361, டாம் வீதி, கொழும்பு 12	2387896
திரு. ராஜு சிவராமன்	9A அமரசேகர மாவத்தை, கொழும்பு 05.	2502817
திரு.வீ.ஏ. மதுரைவீரன்	92.2 ஆம் குறுக்குத்தெரு. கொழும்பு 11	2556550
திரு.ஏ.கே. சுப்பையா	12A.டீ பொன்சேகா றோட், கொழும்பு 05.	2587287
திரு. இரா. இராமலிங்கம்	லண்டன்	
திரு. ஆர். பரமசிவம்	ஹோட்டல் அமராவதி, கொழும்பு 03.	2577418

அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழுவின் பணிகள் 2000 - 2018

நினைவுப் பேருரைகள்

1. பேராசிரியர் மு. சின்னத்தம்பி
   பெருந்தோட்டத்துறை தமிழ் இளைஞர்கள்: இன்றும் நாளையும் (2000)
2. பேராசிரியர் வி. சூரிய நாராயணன்
   இளைமலையகம் - புதிய வாய்ப்புகளும் சவால்களும் (2001)
3. பேராசிரியர் மா. கருணாநிதி
   மலையகக் கல்வி (2002)
4. திருமதி லலிதா நடராஜா
   மலையகப் பெண்கள் (2003)
5. திரு. வ. செல்வராஜா
   மலையக மக்களும் புத்தி ஜீவிகளும் (2004)
6. பேராசிரியர் சி. மௌனகுரு
   தமிழர் வரலாறும் பண்பாடும்: தெரிந்ததும் தெரியாததும் (2005)
7. திரு.பெ. வேலுசாமி
   மலையக இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் அம்சங்கள் (2006)
8. திரு. லெனின் மதிவானம்
   மலேசியா தமிழரின் சமகால வாழ்வியல் பரிமாணங்கள்: சில அவதானிப்புகள் (2007)
9. திருமதி. ஷோபனாதேவி இராஜேந்திரன்
   பெருந்தோட்டத்துறை சிறுவர் உரிமை மீறல்கள்: சிறுவர் தொழிலாளர் பற்றிய விசேட கண்ணோட்டம் (2008)
10. திரு. இரா. ஜெ. ட்ரொட்ஸ்கி
    சமூக அசைவியக்கத்தில் சட்டங்களின் தாக்கம்: ஒரு வரலாற்றுப் பார்வை (2009)
11. திரு. எம். கணேசமூர்த்தி
    மலையக மக்களின் சமூக பொருளாதாரம்: ஒரு வரலாற்றுப் பார்வை (2010)
12. திரு. தெளிவத்தை ஜோசப்
    மலையகம் எனும் அடையாளம்: மலையக இலக்கியத்தின் வகிபங்கு. (2011)
13. திரு. ஆர். ராமேஷ்
    உள்ளூராட்சி அதிகார சபைகளும் பெருந்தோட்ட மக்களும் : ஒரு கோட்பாட்டு ரீதியான விமர்சன நோக்கு (2012)

14. திரு. எஸ். விஜயகுமார்
மலையக அரசியல் செல்நெறியும் மலையக மக்களும் (2013)

15. யசோதரா கதிர்காமத்தம்பி
மலையக மக்களின் வாழ்வியல் மனித உரிமைகள் நோக்கு (2014)

▸ கட்டுரைப் போட்டியும் ஆய்வரங்கும்

1. இளைஞர்களுக்கான கட்டுரைப் போட்டி (2000)
2. மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி (2001)
3. ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டி (2002)
4. ஆய்வரங்கு (2003)

▸ நூல் வெளியீடு

1. மலையகப் பரிசுக்கட்டுரைகள் (2000)
2. சிவலிங்கம் சிந்தனைகள் (2002)
3. மலையக சமகாலப் பிரச்சினைகள் (2003)
4. இனத்துவ முரண்பாடுகளும் மலையக மக்களும்: ஒரு பல்பக்கப் பார்வை (2007)

▸ கௌரவிப்பு

க.பொத. உயர்தரப் பரீட்சையில் சித்தி (2004)
செல்வன் நிரோன்காந் மகாலிங்கம்

இலக்கியம் : திரு. ஆ. தமிழோவியன் (2004)
கல்வி : திரு. தி. பாரதி இராமசாமி (2004)
இலக்கியம் : திரு.பீ. மரியதாஸ் (2005)
நாடகம் : திரு. ஏ. முத்தையா (2005)



திரு. எம்.எம். ஜெயசீலன்

அமரர் இர. சிவலிங்கம் அவர்களின் பதினாறாவது நினைவுப் பேருரையை நிகழ்த்தும் திரு. எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றிவருகிறார். கண்டி மாவட்டத்தின் ரங்கல பிரதேசத்தைச் சேர்ந்த இவர், தனது ஆரம்ப கல்வியை பேர்ன்சைட் தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை ரங்கலை தமிழ் மகாவித்தியாலத்திலும் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தை பெற்றுக்கொண்டதோடு அப்பல்கலைக் கழகத்திலேயே தனது முதுதத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வினையும் தற்போது மேற்கொண்டு வருகின்றார். நவீன இலக்கியம், இலக்கிய விமர்சனம், பண்பாட்டியல் போன்ற துறைகளில் தீவிர ஆர்வம் செலுத்தி வரும் இவர், மலையகத் தமிழரின் கலை இலக்கியங்கள் மற்றும் பண்பாடு குறித்த பல ஆய்வுக்கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேசிய ஆய்வரங்குகளில் சமர்ப்பித்துள்ளதுடன் பல ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ச்சியாக எழுதியும் வருகின்றார். அமரர் இர.சிவலிங்கத்தின் இந்த பதினாறாவது நினைவுப் பேருரையை ஜெயசீலன் நிகழ்த்துவதையிட்டு ஞாபகார்த்த குழு மகிழ்ச்சியடைவதோடு அவரது பணிகள் மென்மேலும் சிறக்க வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகிறது.

பேராசிரியர் தை. தனராஜ்
பதிப்பாசிரியர்

27.09.2015

Printed by : Sri Digital Press, Colombo - 06. M : 0777-275489
www.sridigitalpress.com